# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## ஜூலை 2010 ஜீவியம் 16 மலர் 3


இம்மாத மலரில். . . .

## பொருளடக்கம்

பக்கம்


இம்மாதச் செய்தி ..... 2

அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ..... 3

மனித சுபாவத்தைப் பற்றிய நம் கவனத்தை ஈர்க்கக்கூடிய சில தகவல்கள் ..... 15

சாவித்ரி ..... 25

லைப் டிவைன் ..... 28

லைப் டிவைன் - கருத்து ..... 38

அன்பர் கடிதம் ..... 42

யோக வாழ்க்கை விளக்கம் V ..... 43

தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ..... 54

பூரணயோகம் - முதல் வாயில்கள் ..... 55

அன்னையின் கைக்குட்டை ..... 57


❀ ❀ ❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.


வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-


## ஜீவியத்தின் ஓசை

**எவரும் போனில் பேசலாம் என்பதுபோல ரிஷிகள் பெற்ற ஆன்மீகப் பரிசை சாதாரண-மானவனும் பெறுவது அன்னைச் சூழல்.**

**வேலை சூட்சும லோகத்தில் முடிந்தபின் நம் உலகில் அது வெளிப்பட ஒரே நிபந்தனை மனம் செயலிலிருந்து விலகுவது.**

**வெண்மையான ஒளி உள்ளே ஆனந்தமாக உற்பத்தி-யானால் இறைவனின் அனுமதி நாம் செய்யும் வேலைக்கு உண்டென்று பொருள்.**

## இம்மாதச் செய்தி

**பகவானே அன்னை,**

**அன்னையே பகவான்.**



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

- **நாற்காலியில் உட்கார உடம்பு கூசுகிறது.**

* பெரியவர்கள் எதிரில் சிறுவர்கள் நாற்காலியில் உட்காரக் கூச்சப்படுவது பெரிய நல்ல குணம்.
இதைவிடப் பெரிய நல்ல குணமில்லை.
ஆனால் இது ஒரு மூட நம்பிக்கை.
சுத்தமாக எந்தப் பலனுமில்லை.
இது போன்றவை:
1) மாமிசம் சாப்பிடமாட்டேன்,
2) எளியவரிடம் சமமாக நடப்பேன்,
3) எளிய வாழ்வு,
4) அஹிம்சை,
5) குறித்த நேரத்தில் செயல்படுவது,
6) கடன் வாங்குவதில்லை,
7) அன்னை படம்,
8) தியானம்,
9) காணிக்கை,
10) பிளசிங் பாக்கட்,
11) ஒரு வருஷம்கூடப் பெயிலானதில்லை,
12) ஒரு தப்பும் செய்ததில்லை,
13) மரியாதையாகப் பழகுதல்,
14) அன்னை நூல்களைப் படிப்பது,
15) *The Life Divine* படிப்பது,
16) ஸ்தலத்திற்கு நடந்து போவது,

17) ஸ்தோத்திரம் சொல்வது,
18) விரதமிருப்பது,
19) திருவிழாவில் கலந்து கொள்வது,
20) **அன்னை தரிசனம் ஆகஸ்ட் 15, பிப்ரவரி 21, நவம்பர் 17, டிசம்பர் 5 பெறுவது.**

என்ன செய்கிறோம் என்பதற்குப் பலனில்லை.
என்ன மனப்பான்மையுடன் செய்கிறோம் என்பதற்குப் பலன் உண்டு. அர்த்தமேயில்லாததும் நமக்கு அபரிமிதமான பலன் தரும் அளவுக்கு நாம் அர்த்தமற்றவர்கள்.

*மனம்:* இந்த அர்த்தமற்ற காரியங்களும் செய்யத் தவறினால் நம்மை அளவு கடந்து பாதிக்கும் அளவுக்கு நாம் ஒன்றுமில்லாத பூஜ்யம்.

அதனால் ஒரே இலட்சியத்தை இம்முறையாலும், அதன் எதிரான முறையாலும் சாதிக்கலாம் என்பது.
இதுவே பலன் கொடுத்தால் போதும் என்பது நம் நிலை.
இவற்றுள் ஒன்றை நாம் ஒரு நாள் கடப்பது பெரிய சாதனை.
இந்த சக்திக்கு மரணமும், மரணத்திலிருந்து பிழைப்பதும் ஒன்றே.
உலகில் நல்லவர் குறைவு.
நல்லவர்கள் வாழ்வதில்லை நானிலத்தில் என்பது பழமொழி.
**நல்லவர் அன்பரானால், அவர் வாழ்வு அளவு கடந்து உயரும். அவர் பிரார்த்தனைகள் அத்தனையும் பலிக்கும். பிரார்த்திக்காமலே பல பலிக்கும். அவர் வாழ்வில் தவறே ஏற்படாது**.
(தவறானவர்கட்கு வலியப் போய் உதவினால் தவறாது தவறு நடக்கும்).

இத்தொடரில் 141 கட்டுரைகள் உள்ளன.



இவற்றுள் கூறும் கருத்துகள் இந்த கட்டத்தைக் - *நல்லவர் அன்பராகும்* - கடந்ததாகும்.
அவ்வாழ்வு இன்று உலகிலில்லை.
அவ்வாழ்வை லாபம், ஆதாயம் மூலமாக விளக்க முடியாது.
அது லாபம், ஆதாயத்தைக் கடந்த நிலை.
எப்படி அவ்வாழ்வு ஏற்பட்டது என்பதைப் பார்ப்போம்.

- பகவான் 1872லும், அன்னை 1878லும் பிறந்தனர்.
அவர்கள் பிறந்ததற்கு முன்னிருந்த உலகமும், அதற்குப் பின்னிருந்த உலகமும் வேறு.
1950இல் பகவான் சமாதியானார்.
1956இல் சத்தியஜீவியம் புவிக்கு வந்தது.
**சத்தியஜீவியம் அதை ஏற்றவர் வாழ்வில் நரகம், தோல்வியை அழித்துவிட்டது**.
1959இல் அன்னை பகவானை தினசரி சூட்சும உலகில் சந்தித்தார்.
1967இல் உலக சர்க்கார் எல்லாம் சத்தியஜீவிய கட்டுப்பாட்டிற்குள் வந்ததாகக் கூறினார்.
1969இல் சத்தியஜீவியம் உருவம் பெற்றது.
1973இல் அன்னை சமாதியானார்.
**1973இல் அன்னை பூதவுடலை விட்டுப் போகும்பொழுது அன்னை பக்தர்கள் அனைவருக்கும் சொர்க்கத்தைப் பூவுலகில் கொண்டுவந்துவிட்டார்**.

*இன்றைய நிலை என்ன?*

நல்லவர்கள், நல்லவர்களாக மட்டும் நடந்தால் வாழ்வு சிறப்பாக இருக்கும்.
நல்லவர்கள், அம் மனநிலையைக் கடந்து அன்னை கோட்பாடுகளை ஏற்று வாழ்க்கையை நடத்த முயன்றால் அவர்கள் வாழ்க்கையில் விரும்பக்கூடியதுஎன ஒன்றிருக்காது. அப்படி விரும்பினால், அதற்குரிய முயற்சியைக் குறைவற எடுப்பாரானால் அவர்,

- தம் துறையில் தம் ஊரில், மாநிலத்தில், இந்தியாவில் (first level) முன்னோடிகளுடைய வரிசைக்கு வருவார்.
- எந்தத் துறையிலும் எந்த அளவுக்கு உயர முயன்றாலும் பலிக்கும்.
- வாழ்க்கைப் பலனை எதிர்பாராமல், ஆன்மீகப் பலனை நாடினால்,

***யோகத்தை மேற்கொள்ளலாம்.***

- **யோயஸ் சிரத்தஹா ஸயேவ சகா.**

✲ "நீ எதை ஆர்வமாக நினைக்கிறாயோ, நீ அதாக மாறிவிடுவாய்" என்பது கீதை. அப்படியெனில் நாம் இன்று எப்படியிருக்கிறோமோ, அப்படியிருக்க இதற்குமுன் நாம் ஆர்வமாக நினைத்ததாக அர்த்தம்.

- இது கீதை.
- இதுவே பூரணயோக தத்துவம்.
- ஊன்றிப் பார்த்தால் நாம் இன்றுள்ள நிலை - வியாதி, தரித்திரம், சிக்கல், வேதனை - நாம் நெடுநாளாக விரும்பியதுஎன்று புரியும்.
  - நம்மால், மனத்தாலும் இக்கருத்தை ஏற்க முடியுமா?
  - எலக்ஷனில் தோற்றால், நம் ஆழ்ந்த மனம் தோல்விக்காக ஏங்கியதுஎனப் பொருள்.

அப்படி மனத்துள் பொறி தட்டினால் க்ஷணத்தில் தளர்ந்து போன உடல் வீறு கொண்டெழும்.

பெரும்பணம் வேண்டும் என்பதை *அப்படி* மனம் புரிந்து கொண்டால், உடனே ஓரிரு வாரத்தில், கையில் பணமாக வரும்.



அன்னை இமயமலையை பாண்டியில் கண்டார்.
கப்பல் புறப்பட்டது, ஓங்காரமாயிற்று.

உயிர் போகும் தருணத்தில் அன்னைக்குச் செய்தி வந்தால் உயிர் பிழைக்கும்.

**இந்த சக்தியையும் தோற்கடிப்பது மனிதனுடைய குதர்க்கம்.**

நம் மனம் எங்கிருக்கிறதுஎன அறிய முடியாது.
எந்தத் திசையில் போகிறதுஎன அறிய முடியாது,
பேச முடியாது.
நினைக்க முடியாது.

அதே போல் (Good Will) நல்லெண்ணம் நினைவாக எழுந்தால் பெரிய நல்லது நடக்கும்.

யாருக்கு என்ன சக்தி power உண்டுஎன அறிய முடியாது.
பேசாமலிருப்பதும் கடினம்.
பேசுவதும் தவறு.
எப்படிப் போவது?
இங்கெல்லாம் பாசம், உறவு செயல்படும்.
முடிந்த ஆயுளை நீட்டும்; 50 வருஷமும் நீட்டும்.

அன்னை ஒரு சக்தி, பெரிய சக்தி, பிரபஞ்சத்தில் மிகப்பெரிய சக்தி, உலகிலில்லை.

ஆணவம் (Ego) போனால் force செயல்படும்.
அல்ப மனம் மாறவேண்டும்.

அன்றாட விஷயங்களில் இதை சோதனை செய்தால் நாம் பாதியில் விட்டுவிடுவது தெரியும்.

*அன்றாட விஷயங்களில் ஒன்று பலித்தால் 8 வருஷமாக விற்க முடியாத சொத்து விலை போகும்.*

அது போன்று ஒரு காரியம் முடிந்தால், அன்றாட வாழ்வில் அர்த்தமற்றதையும் அப்படிச் செய்யவேண்டும்.

இராகு காலம் என்ன செய்யும்?

இராகு காலத்திற்கு சவால்விட்டால் அது தண்டிக்கும்.

மே மாதம் மழை பெய்து நெல் நனைந்தது.

பேசியவருக்கு ஜுரம் வந்தது.

- Ph.D. பட்டம் எடுத்து 15 வருஷம் அன்பர்களைச் சந்தித்தவர் அன்னையை நம்பவில்லை என்பது நம் அனுபவம்.

வியாபாரி 70,000 ரூபாய்க்கு கேட்கும் சரக்கை நம்மவர் 65,000 ரூபாய்க்கு விற்கிறார் எனில் அன்னை எப்படி பலிப்பார்?

காபி போடுவதை அப்படி அன்னைக்குரிய முறையில் போட்டால், அந்தக் காபியைச் சாப்பிட அன்று கவர்னர் வீட்டிற்கு வருவார். எல்லாக் காரியங்களும் அப்படி ஒரு நாள் பரிமளித்தால், அதே நிமிஷம் அருள் செயல்படும். அதன்பின் நாம் எந்தப் பெரிய முயற்சியும் அப்படி எடுத்தால் தவறாமல் பலிக்கும்.

நாமறிந்த வாழ்வுக்கும் அன்னைக்கும் உள்ள தூரம் குதிரை சவாரிக்கும், காருக்கும் உள்ள தூரம். மனித நல்லெண்ணம் லேசானது. எனினும் அந்த நல்லெண்ணத்திற்கும் சக்தி அதிகம்.

நாம் அன்னை கூறுவதை நம்புவதில்லை. அன்னை மற்றவர் மூலம் நம் காரியத்தை முடிக்கிறார். அமெரிக்காவில் ஆப்பரேஷன் செய்துகொண்ட ஆசிரம டாக்டர் "ஆசிரம நர்ஸ் தேவலாம்" என்றார்.

*நாம் எந்த இடத்தில் பழைய பழக்கத்திற்குப் போகிறோம் என்பதைக் காண்பது முக்கியம். அங்கு மாறுவது அவசியம்.*

## ❑ நல்லவர் ஒத்து வரவில்லை.

✻ என் ஆசிரியர், நல்லவர், நல்லவர்என எங்கும் பெயர் வாங்கியவர், பிரியமாக வந்தார், வேலையில் சுறுசுறுப்பு. அவரிடம் எந்தக் குறையும் எவருக்குமில்லை. பல



தரிசனங்கட்கு வந்திருக்கிறார். அன்னையை நேரில் தரிசித்திருக்கிறார். அவர் நமக்கு ஒத்து வரவில்லை. நாம் அவருக்கு ஒத்து வரவில்லை. கொஞ்ச நாளிருந்தார். முன்பு இவர் அனுபவம் எதைத் தொட்டாலும் பொன்னாகும். இங்கு எதைத் தொட்டாலும் பிரச்சினை வருகிறது. இனி சரி வாராதுஎனப் போய்விட்டார்.

ஏன் இந்த நிலை?

இவர் பரம்பரையாக ஆசாரமானவர். பழைய சம்பிரதாயங்களைப் பாராட்டுபவர். அது அன்னைக்கு ஒத்து வாராது.

*அன்னையை ஏற்றவர்களாலேயே, அன்னைச் சேவையிலிருக்க முடியும். மற்றவர் எவ்வளவு நல்லவரானாலும் முடியாது.*

என் பேராசிரியரின் அனுபவம்:

அவரது சித்தப்பா இறந்துவிட்டார். அவர் மகனையும், மனைவியையும் பல வருஷம் வைத்திருந்து, பையனை B.E. படிக்க வைத்து, பெரிய இடத்தில் திருமணம் செய்து வைத்தார். சர்வீஸிலிருக்கும்பொழுது 4 வருஷத்தில் விபத்தில் இறந்துவிட்டான். ஏன் இது?

தாம் M.A., தம்பியை B.E., படிக்க வைத்தார். இதைவிடப் பெரிய மனதில்லை. சுபாவத்தில் இவர் அளவு கடந்து பிரியமாக இருப்பார். ஒரு முக்கியமான விஷயத்தில் இலட்சியவாதியாகவுமிருந்தார். ஆனால் சொந்த சுபாவம் அல்பமானது. பால்ய நண்பர்களை மதிக்கமாட்டார். எவரையும் அந்தஸ்திற்கேற்ப நடத்துவாரேதவிர, அன்பிற்குரியவாறு நடத்தமாட்டார்.

எமகண்டம் என்ன செய்யும், நான் முருகனைக் காணப் போகிறேன் என்றான் இந்த என்ஜீனியர். அப்படிப் பேசக் கூடாது. அதனால் எமகண்டம் அவனைப் பாதித்தது. அது அவன் பங்கு.

*நல்லது செய்வதற்கும் அளவுண்டு.*

*இவர் தன் சுபாவம் அனுமதிக்காத அளவுக்குப் பெரிய நல்லதை உடன் பிறக்காத தம்பிக்குச் செய்தது, அது அவன் உயிருக்கு ஆபத்தாய்விட்டது.*

- நாட்டில் தலைவரை நியமிப்பது நேரான சூழலில் எளிது. சூழல் சரியில்லாவிட்டால் ஒரு விசாபெற மலையைப் புரட்ட வேண்டும்என அன்னை கூறுகிறார்.

நாட்டில் எந்த நிலையையும் அன்பர் பெறலாம்.

*சிறு விஷயங்கள் முக்கியம்.*

முக்கிய நேரங்களில் சிறுவிஷயம் காரியத்தை முடிப்பதையும் அல்லது காரியத்தைக் கெடுப்பதையும் நாம் அறிவோம்.

ஒரு 30 அல்லது 40 தொடர்ந்த நிகழ்ச்சிகளில் ஒவ்வொன்றிலும் இரு பக்கங்களுண்டு. முதல் விஷயத்தில் சரியான பக்கத்தில் நாமிருந்தால் இரண்டாம் விஷயத்திற்கு போகிறோம். அதே போல் நாம் 7 அல்லது 8 நிலைமைக்கு மேல் போவதில்லை. 30 அல்லது 40 விஷயங்களிலும் தொடர்ந்து சரியான முடிவு எடுத்தால் அக்காரியத்தை சாதிக்கலாம்.

*அன்னை கூறியவை (**Mother's words**):*

- இனிமையாகப் பழகு (Be pleasant to everyone).
- கடமையைச் செய் (Do your duty).
- கவலைப்படுவதும் சந்தோஷப்படுவதும் மனித அறியாமை.

***அடக்கம் நல்லது, சந்தோஷம் (cheerfulness) நல்லது.***

- **1929, Circumconscient.**
  **பிறந்த நாள் (circumconscient) சூழலின் சூட்சும லோகங்கள்**



- நாம் இராசி என்பது பழைய ஜென்மங்களில் நமது ஆன்மா பெற்ற அனுபவங்களின் பலன்கள். **நம் இராசியுள்ள ஆழத்தில் அன்னையை ஏற்றால் நல்லது பெரிய நல்லதாகும், கெட்டது அழியும் அல்லது திருவுருமாறும்**. மனிதனுக்கு அன்னை முக்கியமில்லை. தனக்கு அதிர்ஷ்டம் முக்கியமில்லை. நாலு பேர் அவனை மரியாதையாக நினைக்க வேண்டும். அதைவிட முக்கியமாக தான் தன்னைத் திறமைசாலி, நல்லவன்என நம்ப வேண்டும். சாதாரண மனிதனுக்கு இது self-confidence வாழும் தெம்பு தருகிறது. அவனுக்குப் பிரச்சினையில்லை. அவனுக்கு வாழ்வில் நல்ல காலம் வந்து அதிர்ஷ்டம் கதவைத் தட்டும் நேரம் வந்துவிட்டால், அவன் மாற வேண்டும். மாற மறுத்தால் அதிர்ஷ்டம் பலிக்காது. மனம் தன் உண்மை நிலையை அறிந்து, மாற முடிவு செய்தால், தரித்திரம் அதிர்ஷ்டமாக சிரமமின்றி மாறும். அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொட்டினால், அவன் மாற மறுத்தால், ஆபத்து வந்து, அனைத்தும் போய் தெருவில் நின்று பிறகு அதிர்ஷ்டமாக மாறும். அன்னையை அந்த இடத்தில் அந்த நேரத்தில் ஏற்றுக்கொண்டால் தரித்திரம் அதிர்ஷ்டமாக அற்புதமாக மாறும். அன்பர்கள் ஓரளவு இடம் கொடுப்பார்கள். அத்துடன் நிறுத்திக் கொள்வார்கள்.

அதுபோன்ற மூவர் 40 அல்லது 50 ஆண்டுகட்குமுன் பெற்ற அனுபவம்.

*முதல்வர்:*

ஏழ்மையையேயறியாத நிரந்தர தரித்திரம் பரம்பரையாய் குடிகொண்ட குடும்பத்தவர். அதாவது வீட்டில் எதற்கும் பஞ்சமில்லை. ஆனால் எதுவும் நிலையில்லை. வசதிஎன்று திடீரென மறையும்எனக் கூற முடியாது. அதனால் வசதியிருந்தும் மனம் நிலையில்லாததால், தரித்திரம் ஜீவியத்தைப் பற்றிக் கொண்டது. அவர் குடும்பத்தாருடன்

தொடர்பு கொண்டவர் அனைவரும் பல தலைமுறைகளாக திவாலானது அனுபவம். அவர் தரித்திரத்தின் அம்சங்கள்: (1) பணம் வசதியாக வரும், ஆனால் நிலையிருக்காது, (2) மிகவும் பிரியமாக நாணயமாகப் பழகுவார்கள், ஆனால் அவர்கள் இராசி பழகுபவரை திவாலாக்கும், (3) எல்லாக் கெட்ட பழக்கங்களும் எல்லோருக்கும் உண்டு, மறைவாய் வெளியூரில் அனுபவிப்பார்கள்.

இவர் ஓர் அம்சத்தில் மாற முயன்று, இரண்டு அம்சத்தில் பலன்பெற்று, பிறகு அன்னையை ஏற்றுக்கொண்டு பரம்பரை தரித்திரம், அவருக்கும், அவர் குடும்பத்தாருக்கும், உடனுள்ள மற்றவர்க்கும் பெரிய அதிர்ஷ்டமாகத் திருவுருமாறிற்று. யார் மூலமாக இவருக்கு அதிர்ஷ்டம் வந்ததோ, அவர் அதிர்ஷ்டம் தரித்திரமானவர்க்கு மாறியது.

*இரண்டாவது நபர்:*

தரித்திரம் என்பதின் சிறுவிளைவு ஏழ்மை. பெருங்கடுமை, கொடுமையான அல்பமான மனம் தரித்திரம். இவருடைய பரம்பரையில் அம்மனநிலை அவர்கள் இஷ்டதெய்வமாயிற்று (Their misfortune has become a being and rose to the level of a deity). மனித சுபாவத்தின் மூலத்தில் இந்த தரித்திரம் தன்னை பேச்சு, பழக்கம், பொய், ஏமாற்று வித்தைகளாக மாற்றி தலைமுறை தலைமுறையாக அதை பண்பாகப் போற்றி வளர்த்த குடும்பம். இந்தக் குடும்பத்துடன் தூரத்து உறவு ஏற்பட்ட அனைவரும் நடுத்தெருவுக்கு வந்தது சரித்திரம். தற்செயலாக (centre of luck) அதிர்ஷ்டத்தின் மையத்திற்கு இவர் வந்தார். வந்த இடத்தில் அதிர்ஷ்டம் மறைந்து, தரித்திரம் தலைதூக்கியது. அன்னை பலியானவரைக் காப்பாற்றினார். அவர் பழைய அதிர்ஷ்டம் அன்னை அதிர்ஷ்டமாக நிலைமை சரியாயிற்று. தரித்திரமே உருவானவர் தம்



மனத்துள் நினைத்து நம்பியது "என்னால் இக்குடும்பம் வசதியாகிவிட்டது, நான் அதிர்ஷ்டசாலி. என்னுடன் தொடர்பு கொண்டவரெல்லாம் அதிர்ஷ்டம் பெற்றனர்". உண்மை, இவருடன் சிறுதொடர்பு கொண்ட பலரும் முழுவதும் அழிந்தனர்.

*மூன்றாம் நபர்:*

இவருடைய தரித்திரம் மிதமானது. பரம்பரையானதில்லை. ஆன்மீக வலுக்கொண்டதுமில்லை. இவர் வந்து சேர்ந்த இடத்தில் ஏராளமாக அதிர்ஷ்டம் புகுந்து வெளிச் சென்றாலும் அதிர்ஷ்டம் தங்காத இடம். இவருடைய ஸ்தானம் முக்கியம். இவர் தரித்திரம் மூன்று வகைகளில் அதிர்ஷ்டமாயிற்று. பணம், அந்தஸ்து, ஞானம் வந்தது. தாம் அன்னையால் பெற்றவையிவையெனப் புரிந்து கொண்டார். இவர் தரித்திரத்தைமீறி இவர் வந்து தங்கிய இடத்திற்கு ஓரளவு அதிர்ஷ்டம் வந்தது. அவர்கட்கு வர வேண்டிய அதிர்ஷ்டம் வந்தது, ஆனால் அதைப் பெற்றுக் கொண்டது மற்றொருவர். இவர் மனம் நினைத்தது என்னவெனில், "நான் அதிர்ஷ்டக்காரன். என் அதிர்ஷ்டம் இவர்கட்கு வந்திருக்கிறது". இவர் இராசி உலகத்திற்கு தரித்திரம் தந்த இராசி. இவர் பிறந்த நாளில் உலகம் 80 வருஷத்திற்கு தரித்திரம் பெற்றது. மீண்டும் ஒரு முறை அதே தரித்திரம் வந்து அருளால் இரண்டு நாளில் விலகியது.

பகவான், அன்னை பிறந்த நாட்கள் கடந்த நூற்றாண்டுகளிலும் - அவர்கள் பிறக்குமுன்னரும் - அதிர்ஷ்டம் தாங்கிய நாட்களாக இருக்கின்றன. இவருக்கு அதே போன்ற எதிர் ராசி. இவர் அன்னையை தன் கடுமையான குணத்திற்கு எதிராக ஏற்றுக்கொண்டால் பகவானுடைய பேரருள் கிடைக்கும். மனமாற்றம் பிரச்சினையைத் தீர்க்கும். சுபாவ மாற்றம் இராசியை மாற்றும்.

அப்படியும் மாறாத தரித்திரம் உண்டு. ஏனெனில் தரித்திரம் (is infinite) அனந்தமானது. அதிர்ஷ்டம் முடிவற்றது (infinite), தரித்திரம் முடிவற்றது (infinite). எதுவும் முடிவற்றது.

இது மட்டுமன்று.

அனைவருடைய நிலையும் அதுவே.

அன்னை இதுபோல் 2000 பேருக்கு அனுக்கிரஹம் செய்தார்.

அவர்கள் திருவுருமாற வந்தவர்கள். அவர்களை பின்பற்றாதே என்பார்.

(Subconscient) பாதாளம், (Circumconscient) சூழலின் சூட்சுமம், மற்றும் (Intraconscient) அகத்தின் சூட்சுமம் என்பவற்றைப் பற்றிப் பேசுகிறது.

அவை பிரம்மாண்டமான லோகங்கள்.

எந்த லோகத்தில் என்ன இருக்கிறதுஎன நாம் அறியோம். நாம் யார்என அறிய முடியாது.

சந்தோஷம், பெருமை எல்லாம் விவரம் தெரியாதபொழுது அப்படி வரும்.

அதேபோல் வருத்தமும், வெட்கமும் வரும்.

ஆத்மாவை அறிந்தால் இதெல்லாம் இருக்காது.

நல்லது, கெட்டது, உயர்ந்தது, தாழ்ந்ததை நினைக்கும் உரிமை நமக்கில்லை.

நம் பங்கு - அன்னையை நம்புவது.

- அன்னையைமட்டும் நம்புவது.

*தொடரும்....*

❀ ❀ ❀



## மனித சுபாவத்தைப் பற்றிய நம் கவனத்தை ஈர்க்கக்கூடிய சில தகவல்கள்

N. அசோகன்

1. நமக்குள் இருக்கின்ற இறையம்சமாக விளங்குகின்ற சைத்தியப் புருஷனால் சத்தியஜீவிய சக்தியை வாங்கிக் கொண்டு, சத்தியஜீவிய மனிதனாக உருவெடுக்க முடியும். சத்தியஜீவிய மனிதனுடைய உடல் நம்முடைய உடலைவிட மேலும் கெட்டியாக இருக்கும்.
2. மனிதன் தன் அறிவைப்பற்றிப் பெருமையாக நினைக்கிறான். அவனுடைய மூளைதான் அவனுடைய அறிவிற்கு ஆதாரமாக விளங்கினாலும், அவனுடைய அறிவு அவன் உடலிலிருந்து உற்பத்தியானதில்லை.
3. மனிதனுடைய பர்சனாலிட்டியின் ஆழ்நிலையில் உள்ள பிரிவு மேல்மட்டத்திலுள்ள பர்சனாலிட்டியைவிட சக்தி வாய்ந்தது. ஆழத்திலுள்ள பர்சனாலிட்டியின் ஆசைகளும் அபிப்பிராயங்களும் மேல்நிலையிலுள்ள ஆசைகள் மற்றும் அபிப்பிராயங்களுக்கு எதிரானதாகவே இருக்கும்.
4. மனிதனுடைய பகுத்தறிவு இந்த ஜட உலகத்தைத்தான் அவனுக்கு விளக்குகிறது. ஆனால் மனிதனுக்குள்ள உயர்நிலை அறிவு உள்ளெழுச்சியாலும், ஞானதிருஷ்டியாலும் மற்றும் மௌனத்தாலும்தான் அவனுக்குக் கிடைக்கிறது. மேற்கண்ட இம்மூன்றும் அவனுடைய பகுத்தறிவோடு சம்பந்தப்பட்டவை இல்லை.
5. தான் என்ற அகந்தைஉணர்வை நாம் தவறானதுஎன்று சொன்னாலும் பரிணாம வளர்ச்சியில் மனிதனுக்கு ஒரு தனித்தன்மை அமைய இவ்வுணர்வு உதவியுள்ளது. இந்த தனித்தன்மையை மனிதன் இறைவனுக்கு சமர்ப்பணம் செய்தான் என்றால் அப்பட்சத்தில் அகந்தை கரையும். ஆன்மா வெளிவந்து ஆன்மீக தனித்தன்மை பெற்ற மனிதன் பிறப்பான்.

6. மனிதனுடைய ஆன்மா, அறிவு, உணர்வு மையம் மற்றும் உடம்பு என்று இவை நான்கும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டுள்ளன. இப்படி இவைகளுக்குள் சம்பந்தம் இல்லை என்றால் ஒன்றின் தாக்கம் இன்னொன்றுக்கு பரவ முடியாது. நம் உணர்வின் வேகம் நம் உடம்பை பாதிக்கிறது. நம் அறிவு நம் உணர்வை உற்சாகப்படுத்துகிறதுஎன்று இவற்றையெல்லாம் கவனிக்கும் பொழுது மேற்கண்ட தொடர்புகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

7. பகவான் ஸ்ரீ அரவிந்தரின் கருத்துப்படி பார்த்தால் நமக்கு என்ன அனுபவம் கிடைக்கின்றதோ அவை எல்லாம் நம் ஆன்மா விரும்புவதாகும். நம் ஆன்மா அனுமதிக்காத எதுவும் நம்மை வந்து தொடாது.

8. நம் உணவிலிருந்து கிடைக்கும் எனர்ஜி நம்முடம்பின் இயக்கத்திற்குத்தான் போதுமானதாக உள்ளது. நாம் சாதிப்பதற்குத் தேவையான எனர்ஜியை நம் அறிவு மற்றும் உணர்வு மையமும்தான் அளிக்கின்றன.

9. ஆசைகளை நாம் பூர்த்தி செய்ய முடியாது. அவை வளர்ந்து கொண்டேதான் இருக்கும். மேலும் திரும்பத் திரும்ப தலை எடுக்கும். ஆசைகளை முழுமையாகப் பூர்த்தி செய்து அவற்றின் பிடியிலிருந்து விடுபட வேண்டும்என்று நினைப்பவர் அது ஒரு பிரமை என்றுணர வேண்டும்.

10. உடலினுடைய விசேஷ குணம் எப்பொழுதும் நிலைத்திருக்க விரும்புவதாகும். உணர்வு மையத்தினுடைய விசேஷ குணம் அலைபாயும் இயக்கமாகும். அறிவின் தனிப்பட்ட குணம் பிரித்துப் பார்க்கும் ஆராய்ச்சி ஆகும். ஆன்மாவின் குணம் எப்பொழுதுமே பேரின்பத்தில் திளைத்திருப்பதாகும்.

11. பொதுவாக எவரும் எந்த விஷயத்தையும் தம்முடைய கண்ணோட்டத்தில் இருந்து மட்டும்தான் பார்ப்பார்கள். அடுத்தவர் கண்ணோட்டத்திலிருந்து எந்த ஒரு விஷயத்தையும் பார்ப்பதென்பது மனிதன் கட்டாயத்தின்கீழ் செய்வதாகும். மனிதனுடைய அறிவின் கண்ணோட்டம் முழுமையானதாக



இல்லாமல், பகுதியானதாக இருப்பதால் இத்தகைய விளைவுகள் வருகின்றன.

12. மனிதனுடைய அகந்தை மிகவும் சாமர்த்தியமானது. யோகத்தில் ஈடுபடுகின்ற ஒருவர் தம்முடைய அகந்தையை கரைக்க முன்வந்தாரென்றால் அவருடைய அகந்தை தன்னைத் தானே கரைத்துக் கொள்வதாக அவருக்கு உறுதியளிக்கிறது. இதனால் அந்நபர் அவருடைய வேலை முடிந்துவிட்டதாக நினைத்து ஏமாந்து போகிறார்.

13. தற்பெருமை மிகுந்தவனுடைய அகந்தையானது தன்னை இமயமலை அளவிற்குகூட பெரிதாக்கிக் கொள்ளும். அதே சமயத்தில் அவமானப்பட்ட ஒருவருடைய அகந்தை அணு அளவிற்குக்கூட சுருங்கிப்போகும்.

14. அன்னை மற்றும் பகவானின் கருத்துப்படி பார்த்தால் மனிதனுடைய பக்குவப்படாத உணர்வுமையம் உதவி பெறும் பொழுது தான் கட்டுப்பட்டுவிட்டதாக எடுத்துக் கொள்கிறது. அதனால் உதவி பெற்றவுடன் நன்றியறிதலைத் தெரிவிப்பதற்குப் பதிலாக உதவி செய்தவருக்குத் தொந்தரவு செய்ய நினைக்கிறது. கட்டுப்பட்டிருப்பதை விரும்பாததால் இப்படி நன்றியறிதலுக்குப் பதிலாக எரிச்சல் எழுகிறது.

15. மனிதனுடைய உணர்வு மையம் ஒன்றை விரும்பிவிட்டதென்றால் சரியா, தவறா என்றுகூட கருதாமல் அதை தீவிரமாக நாடும். ஆனால் மனிதனுடைய அறிவுதான் நியாய, தர்ம உணர்வுகளை அறிமுகப்படுத்தி உணர்வு மையத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைக்க முயல்கிறது.

16. உயிருக்கு ஆபத்து வந்துவிட்டதென்றால் நம்முடைய உடம்பு அசாதாரண பலத்தைக் கொண்டு வந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயலக்கூடியது.

17. மனிதன் பல மனைவிமார்களை விரும்பக்கூடியவன். ஆனால் நாகரீக வாழ்க்கை சட்டதிட்டங்களைக் கொண்டுவந்து அவனுடைய பல தாரத் திருமண ஆசைகளைக் கட்டுப்படுத்தி வைத்துள்ளது.

18. பகவான் ஸ்ரீ அரவிந்தருடைய கருத்துப்படி பார்த்தால் நம்முடைய அறிவு அதனுடைய ஆராய்ச்சியின் விளைவுகளை, தான் புரிந்துகொள்கிறதேதவிர எந்த ஒரு விஷயத்தையும் நேரடியாகப் புரிந்து கொள்வதில்லை. அறிவின் தன்மை இப்படி அமைந்திருப்பதால் விஷயத்திற்கும், அறிவின் ஆராய்ச்சிக்கும் இடையே இடைவெளி வருகிறது.

19. அசுரன் எல்லாவற்றையும் தனக்குரியதுஎன்று எடுத்துக் கொள்வான்என்று பகவான் சொல்கிறார். மனிதனும் இப்படித்தான் நடந்து கொள்கிறான். ஆகவே மனிதனுக்கு அசுரகுணம் உண்டுஎன்று தெரிகிறது.

20. மனிதனுடைய ஆன்மாவை விழிக்க வைப்பது மிகவும் கடினம். ஆனால் அது விழித்துக் கொண்டதென்றால் அதற்குப் பின்னர் அதை உதாசீனம் செய்வதும் கடினம்.

21. மனிதனுக்கு பாதுகாப்பு மிகவும் முக்கியமென்பதால் அவனுடைய இயற்கையான மனோபாவம் conservativeஆகவே இருக்கிறது. துணிச்சலாகச் செயல்படுவது மற்றும் புதுமையான விஷயங்களை நாடிப்போவது ஆகியவைகள் எல்லாம் மனிதனுக்கு இரண்டாம்பட்சம்தான். மனிதனுடைய பிரதானமான நாட்டம் பாதுகாப்பை நாடுவது.

22. செய்த தவற்றையே நிறைய பேர் திரும்பத் திரும்ப செய்கிறார்கள்என்பது மனிதனுடைய அறிவும், உணர்வு மையமும் அவை பெறும் அனுபவங்களிலிருந்து முறையாகப் பாடம் கற்றுக் கொள்வதில்லைஎன்று தெரிகிறது.

23. தமக்கு ஒருவரைப் பிடித்துவிட்டால் அவர்கள் என்ன செய்தாலும் அது நமக்குச் சரியாகத்தான் தெரிகிறது. நமக்கொருவரை பிடிக்கவில்லை என்றால் அவர்கள் எது செய்தாலும் அது தவறாகத்தான் தெரிகிறது. இப்படி நடந்து கொள்வதில் எந்த நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை. பிரியமும், வெறுப்பும் கண்மூடித்தனமானவை என்பதைத்தான் இது காட்டுகிறது. பிரியம், பாகுபாடு இல்லாமல் ஏற்கிறது. வெறுப்பு பாகுபாடு இல்லாமல் விலக்குகிறது.



24. நம்மிடமுள்ள குறைகளை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அதே குறைகளை மற்றவர்களிடம் நாம் அனுமதிப்பதில்லை. நம்முடைய அகந்தையுடன் நாம் எந்த அளவிற்கு ஐக்கியமாகி உள்ளோம் என்பதைத்தான் இது காட்டுகிறது.

25. மனிதனுடைய இயற்கையான சுபாவத்தின்படி பார்த்தால் அவனுக்கு வேலை செய்வதில் நாட்டம் இருப்பதில்லை. சும்மா இருக்கவே விரும்புகிறான். வேலை செய்து சம்பாதித்தால்தான் சாப்பாடு கிடைக்கும் என்ற நிர்பந்தம் இல்லை என்றால் நிறைய பேர் வேலையே செய்யமாட்டார்கள்.

26. மனிதனுக்குத் தேவையானது கட்டுப்பாடு. ஆனால் அவன் விரும்புவது சுதந்திரம். மனிதன் மாற்றத்தைத் தேடுகிறான். அதே சமயத்தில் இருப்பது நிலைத்து நிற்கவேண்டும் என்றும் கேட்கிறான். தீமையையும், துன்பத்தையும் வெறுக்கிறான். ஆனால் அதே சமயத்தில் அவன் வாழ்க்கையில் பிரச்சினைகள் இல்லை என்றால் வாழ்க்கையில் சுவாரசியம் இல்லை என்றும் பேசுகிறான்.

27. நாம் சமூகத்தில் பழகுகின்ற விதம் என்பது நம்முடைய உண்மையான பர்சனாலிட்டியை மறைத்துக் கொள்ளும் ஒரு போர்வையாகும். நம்முடைய உடம்பை நாம் துணியைப் போட்டு மறைத்துக் கொள்வதைப்போல் நம்முடைய பர்சனாலிட்டியின் வேண்டாத அம்சங்களையெல்லாம் மறைத்து நாலுபேரோடு நாம் நல்லபடியாக உறவாடுவதற்கு நன்னடத்தை உதவுகிறது.

28. நம்முடைய அறிவு அது ஏற்கனவே பார்த்ததையும், அனுபவித்ததையும்தான் நம்பும். அது பார்க்காததையும், அனுபவிக்காததையும் நம்புவது என்பது அதனால் முடியாது. அப்படிப்பட்ட நம்பிக்கை நம்முடைய ஆன்மாவிற்குத்தான் வரும்.

29. நல்ல குணம், கெட்ட குணம் என்பதற்கிடையே உள்ள இடைவெளி மிகவும் குறுகியது. சுறுசுறுப்பாக இருப்பதை நல்ல குணம் என்கிறோம். ஆனால் அதுவே சற்று அதிகமானால் அமைதியின்மையாகி தவறானதாகிவிடுகிறது. கோபம்என்பது சக்தியின் ஒரு வெளிப்பாடு. அப்படிப் பார்த்தால் அது நமக்கு

ஒரு பலமாகும். ஆனால் அதே கோபம் முன்கோபமாக மாறினால் அது ஒரு பலவீனமாகிவிடும். தாராள மனப்பான்மை ஒரு நல்ல குணம்தான். ஆனால் சக்திக்கு மீறி அடுத்தவருக்கு உதவி செய்தால் அது தன்னையே அழிக்கிறது.

30. கடன்பட்டுவிட்டவர்கள் சிலபேர் அதை திருப்பிக் கொடுக்க முடியாதபட்சத்தில் கடனாளிஎன்ற அவமானத்துடன் வாழ்வதைவிட உயிரை விடுவதே மேல்என்று தற்கொலை செய்து கொள்கின்றனர். அகந்தை தன்மானம்என்ற பெயரில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உயிரையும் எடுக்கவல்லது என்பது இதிலிருந்து தெரிகிறது.

31. சமூகத்தில் தனக்குச் சமமானவர்களுடன் பழகுவதைத்தான் மனிதன் மிகவும் ரசிக்கிறான். அவனைவிட உயர்ந்த நிலையில் உள்ளவர்களை அவன் போற்றினாலும் அவர்கள் இவனை நாடி வருவதில்லை. இவனுக்குக் கீழ் இருப்பவர்கள் இவனுடைய உறவை நாடினாலும் அவர்களோடு பழகினால் தன்னுடைய சமூக அந்தஸ்து குறைந்துவிடுமென்று அவர்களுடன் பழகுவதையும் மனிதன் விரும்புவதில்லை.

32. நம்முடைய ஆசைகளை பூர்த்தி செய்துகொள்வதில் கிடைக்கின்ற சந்தோஷத்தைவிட அதே ஆசைகளை வெல்வதில் கிடைக்கின்ற சந்தோஷம் பெரியது. ஆனால் இந்த உண்மை பரவலாகத் தெரியாமல் உள்ளது. அதன் காரணமாக இது உண்மையாஎன்று பரிசோதித்து பார்ப்பதற்குக்கூட யாரும் முன்வரவில்லை.

33. மனிதன் தனக்குத் தேவையில்லாத எத்தனையோ விஷயங்களை இன்னும் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறான். தனக்குக் கிடைத்தது எதையும் விடாத குணம் அவனுக்கு இருப்பதால் இப்படித் தேவையில்லாததை எல்லாம் இன்னமும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறான்.

34. மற்றவர்கள் தம்மைப் பார்ப்பதைப்போல் எவரும் தம்மைப் பார்த்துக் கொள்வதில்லை. அடுத்தவர் கண்ணோட்டத்தில் தம்மைப் பார்த்துக்கொண்டால் அவரவர்களுடைய விழிப்புணர்வு பல மடங்கு அதிகமாகும்.



35. தன்னம்பிக்கையின் தரம் குறைந்தால் அது அகந்தையாகவும், ஆணவமாகவும் மாறிவிடுகிறது. அம்மாதிரியே பணிவின் தரம் தாழ்ந்துபோனால் சேவகத் தன்மையாக மாறிவிடும். எச்சரிக்கை உணர்வு அதிகமானால் அது பயமாக தலை எடுக்கிறது. ஆசை அளவுக்கு அடங்காமல் வளர்ந்தால் பேராசையாக மாறுகிறது. இப்படி அகந்தை தலை எடுக்கும் இடங்களில் எல்லாம் நல்ல உணர்வுகளெல்லாம் கெட்ட உணர்வுகளாக மாறிவிடுகின்றன.

36. அன்பினுடைய ஓர் உயர்ந்த வடிவம்தான் பக்தி. மனிதர்கள் மேல் வைக்கின்ற நம்பிக்கையை தெய்வத்தின்மேல் நாம் வைத்தால் அதனுடைய தரம் உயருகிறது. துணிச்சலின் உயர்ந்த வடிவம்தான் தைரியம். அம்மாதிரியே மகிழ்ச்சியின் உயர்ந்த வடிவம்தான் ஆனந்தம். இப்படி இறை ஸ்பரிசம் நம்முடைய சாதாரண உணர்வுகளைத் தொடும்பொழுதெல்லாம் இவை-களும் அந்த அளவிற்கு இறை மயமாகிவிடுகின்றன.

37. தகுந்த வெகுமதியை எதிர்பார்க்காமல் மனிதனால் எந்த ஒரு முயற்சியையும் எடுக்க முடிவதில்லை. ஒரு குழந்தைக்கு அதன் முன்னால் இருக்கும் ஐஸ்க்ரீமைச் சாப்பிடக்கூடாதுஎன்று சொன்னால் அதற்கு எவ்வளவு கஷ்டமாக இருக்குமோ அதே அளவிற்கு பிரதிபலன் எதிர்பார்க்காமல் வேலை செய்வது என்பது மனிதனுக்குக் கசப்பாக இருக்கிறது.

38. மனிதனால் தன்னுடைய உடைமையாக்கிக் கொள்ள முடியாத எதையும் அவனால் நேசிக்க முடியாது. இந்த மனோபாவம் பேனா, பென்சிலில் இருந்து தான் விரும்பும் தலைவர்கள் மற்றும் தான் வழிபடும் கடவுள்என்று எல்லாவற்றிற்கும் பொருந்தும்.

39. தன்னுடைய உடைமையாக்கிக் கொள்ள முடியாதவரை மனிதனால் நேசிக்க முடியாது. தன்னுடைய பகுத்தறிவால் புரிந்துகொள்ள முடியாத விஷயங்களை அவனால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் உண்மையில் இறை அன்பு இப்படி சொந்தம் கொண்டாடுவதில்லை. உண்மையான அறிவும்

பகுத்தறிவுக்கு உட்பட்டதில்லை.

40. சில பிரமைகளை நம்பிக்கொண்டிருந்தால்தான் மனிதனால் இயங்க முடியும். திருமணத்தின்மூலம் தன்னுடைய சந்தோஷம் அதிகரிக்கிறதுஎன்று அவன் நம்புவதும், சமூகத்தின்மூலம் கிடைப்பனவெல்லாம் தான் சொந்தமாகச் சாதித்ததுஎன்று நம்புவதும் இத்தகைய பிரமைகள். மனிதனுக்குத் தேவையான உயர்ந்த அறிவை வழங்காமல் அதே சமயத்தில் இதுபோன்ற பிரமைகளைக் கலைத்தோமென்றால், மனிதன் குழம்பிப்போய் இயங்க முடியாத நிலைமைக்கு வந்துவிடுவான்.

41. தனக்கு வேண்டியனவெல்லாம் கொடுக்கின்றவர்தாம் கடவுள் என்று மனிதன் நினைத்துக் கொண்டுள்ளான். ஆனால் கடவுளோ மனிதன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு தம்மைத் தேடிவர வேண்டும்என்று எதிர்பார்க்கின்றார். இந்த இரண்டு நிலைப்பாடுகளும் சமரசம் செய்ய முடியாத இரு எதிர் முனைகளாக உள்ளன. இருந்தாலும் மனிதனும், கடவுளும் உறவாடிக் கொண்டுதான் உள்ளனர். இதை வைத்துப் பார்க்கும்பொழுது சமரசம் ஆகக்கூடிய இடம் ஏதோ ஒன்றுள்ளதுஎன்று தெரிகிறது.

42. படிப்பறிவில்லாத கிராமவாசி இன்னும் நம்பிக் கொண்டுள்ள மூடநம்பிக்கைகளை, தான் கைவிட்டுவிட்டதாகப் படித்த நகரவாசி பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறான். ஆனால் பண முதலீட்டிற்குப் பின்னால்தான் வளர்ச்சி வருகிறதுஎன்று நகரவாசி நம்புவது கிராமவாசியின் மூடநம்பிக்கையைவிட எவ்வகையிலும் குறைந்தது இல்லை.

43. தனித்தன்மைஎன்பது வித்தியாசமான அபிப்பிராயங்களை வைத்து இருப்பதாலோ மற்றும் வித்தியாசமாகச் செயல்-படுவதாலோமட்டும் வந்துவிடாது. நம்முடைய பர்சனாலிட்டியை மேம்படுத்தும் வகையில் நம்முடைய அபிப்பிராயங்களும் செயல்பாடுகளும் விசேஷமானவைகளாக இருந்தால் அப்பொழுது தனித்தன்மை ஒருவருக்கு இருப்பதாகக் கருதப்படும்.



44. அடுத்தவர் தமக்கு இணக்கமாக இருக்கும் வரையில்தான் ஒருவர் இன்னொருவர் உறவை நாடுவார். தம்முடைய விருப்பங்களை ஏற்காமல் அடுத்தவர் தம்முடைய சொந்த விருப்பங்களை வலியுறுத்தும்பொழுது உறவு கசந்துப்போகிறது. நண்பர்கள், உறவினர்கள் என்றுமட்டுமில்லை, தலைவர்கள் மற்றும் தொண்டர்களுக்கும் இது பொருந்தும்.

45. அவரவர்கட்குச் சமநிலையிலுள்ளவர்கள் முன்னேறினால்தான் தாமும் முன்னேற வேண்டுமென்று மக்கள் உந்தப்படுவார்கள். ஒருவரைவிட அந்தஸ்தில் உயர்ந்தவரோ அல்லது அந்தஸ்தில் குறைந்தவரோ புதிதாக ஏதேனும் சாதித்தாலும், அது மக்கள் கண்ணில்படுவதில்லை.

46. மனிதன் வாய்ப்புகளை வரவேற்கிறான்; சிரமங்களைத் தவிர்க்கிறான். ஆனால் அவனுக்குத் தெரியாத உண்மை ஒன்று இருக்கிறது. அதாவது சிரமங்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதில் தனக்குக் கிடைக்கும் சாமர்த்தியமும், அனுபவமும்தான் வருகின்ற வாய்ப்புகளையும் நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்ள உதவுகின்றன.

47. அகந்தை நம் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அது இருப்பது நிஜம்தான். இரண்டு பேர் கோபமாக ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்ளும்பொழுது இரு மனிதர்கள் திட்டிக் கொள்வதைத் தான் நாம் பார்க்கிறோம். ஆனால் இரண்டு அகந்தைகள் ஒன்றைஒன்று திட்டிக் கொள்கின்றன என்பதும் உண்மை.

48. மின்சாரம் இருக்கும் பொழுது நாம் அதன் அருமையை உணருவதில்லை. அது இல்லாதபொழுதுதான் நாம் அதன் அருமையை உணர்கிறோம். அருள் விஷயத்திலும் நாம் இப்படித்தான் நடந்து கொள்கிறோம். நம் வாழ்க்கை எல்லா விஷயங்களிலும் சீராக இயங்கிக் கொண்டிருக்கும்பொழுது அருளின் செயல்பாடே இதற்குக் காரணம்என்று தெரிவதில்லை. ஏதேனும் பிரச்சினை வரும்பொழுதுதான் அருளின் செயல்பாடு இல்லாமல் போனதால்தான் பிரச்சினை வந்துள்ளதுஎன்று நாம் உணர்கிறோம்.

49. நாம் ஆர்வமாக ஒன்றை நாடும்பொழுது அந்த ஆர்வம் அப்பொருளை நம் பக்கம் இழுக்கிறது. ஆனால் ஒரு பலனை நாம் எதிர்பார்க்கும்பொழுது அப்பலன் வருவது தள்ளிப் போகிறது. எதிர்பார்ப்பு இல்லாமல் ஆர்வத்தை வளர்த்துக் கொள்வது எப்படிஎன்பது புரியாத புதிராக உள்ளது.

50. எனர்ஜி, பணம், காலம் ஆகியவை விரயமாவது நம் கண்ணிற்குத் தெரிகிறது. ஆனால் ஜீவியம் கண்ணிற்குத் தெரியவில்லை என்பதால் அது விரயமாவதே நமக்குத் தெரிவதில்லை.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிறர் வாழ்வு மலர தன்னை விட்டுக்கொடுப்பது அர்ப்பணம். தன் அதிகாரமும் செல்வாக்கும் அதிகப்படுவதை மனிதன் முன்னேற்றம்என இன்று கருதுகிறான்.

இறைவன் மனித வாழ்வில் மலர்ந்து வெளிப்படுதல் அவசியம்என மனிதன் உணர வேண்டுமானால் தன்னுடைய சொந்த அபிப்பிராயங்களை ரசிக்கும் பழக்கத்தைத் தான் விட்டுவிட வேண்டும்என அவன் அறிய வேண்டும்.

*பிறர் வாழ்வு மலர தன்னை விட்டுக்கொடுப்பது அர்ப்பணம்.*





## P.114 Its clear technique of firm and rounded lives

### தெளிந்த திறமையின் முழுமை பெற்ற வாழ்வு

- ☆ உயிரில்லாத உருவங்களின் பெருமைநிறை மக்கள்
- ☆ மூச்சுவிடும் முழுமை பெற்ற நம்போன்ற உடல்
- ☆ ஆச்சரியத்தில் மூழ்கிப் புல்லரித்த புலன்கள்
- ☆ தெய்வீகலோக சஞ்சாரம் உறவென உணர்த்தும்
- ☆ அற்புத ரூபத்தை அளவுகடந்து பாராட்டி அருகணைத்து
- ☆ தெய்வம் விளையாடும் கருவியாகச் சிறந்து
- ☆ அழிவின் அம்சம் அழியா அமரத்துவம் பெற்றது
- ☆ குறுகிய மூலைகள், ஒதுங்கி நிற்கும் ஓரம்
- ☆ சிறியதன் உயர்வு உச்சத்தை எட்டும் அரியாசனம்
- ☆ எதிர்காலம் கனவுலகையும் கடந்து நின்றது
- ☆ எல்லையில்மட்டும் எழும் பூரணத்தின் முழுமை
- ☆ தனக்குமட்டும் உரிய தகுதியைக் கடந்த உயர்வு
- ☆ எப்பரப்புமற்ற எதுவும் அழிந்த நிலை
- ☆ அளவிறந்ததின் சாயலுக்கும் இடமற்ற மாநிலம்
- ☆ எடுத்துரைக்க முடியாதவனின் எக்காளம் எடுபடாத நேரம்
- ☆ சொந்த அழகின் பூரிப்பில் இழந்த தன்வயம்
- ☆ மந்திரம் வளையும் மாயக்கட்டின் மறுபுறம்
- ☆ ஆத்மா ஒதுங்கி ஒளிந்து பெற்ற ஒருமை
- ☆ எல்லையின் கீறல் எடுபடும் மிடுக்கு
- ☆ நீலவானம் நிமிர்த்தியமைத்த ஆன்மா

☆ ஜோதிமயமான கருவூலம் கட்டுப்படுத்தும் எண்ணம்
☆ புற இலட்சியம் ஆழமற்ற நீச்சல் குளம்
☆ வேலியுள் வாழும் வாழ்வின் தளர்நடை தன்னையேற்று
☆ உடலின் செயல்தரும் சிறுதுளி மகிழ்வு
☆ மனமெனும் மூலைக்குரிய சக்தியென முத்திரையிட்டு
☆ வேகமற்ற பாதுகாப்பு வேண்டும்எனக் கொண்டு
☆ ஆடிஓடி தூங்கும் அவள் குறுகிய உலகம்
☆ பெரிய வேலையைப் பெற மறுத்து
☆ சூறாவளிச் சூழலான பரந்த ஆசைகள் மறந்து
☆ கிருஷ்ணன்போய் குசேலன் வந்ததை அறிய முடியாமல்
☆ ஒளிமயமான பாதையில் அவள் ஒழுங்கு நடை ஓய்ந்தது
☆ ஆத்மா அமைதியுறும் அழகின் உடல்
☆ இனிய ஒளிச்சோலையில் சிரிக்கும் பண்பு
☆ பொன்மயமான தூளியில் பொறுமையாக அசையும்
☆ பெருவெளியின் குரல் அவள் மந்திரமயன் மாடத்தை அடைந்தது

## P.115 She had no wings for wide and dangerous flight

### பரந்து விரியும் ஆபத்தை அனுபவிக்க அவளில்லை

☆ வானமோ பாதாளமோ ஆபத்தை விளைவிக்கவில்லை
☆ பெரிய கனவு இல்லை, பெரிய ராஜபாட்டை தோன்றவில்லை
☆ இழந்த பெரிய அனந்தத்தை மீண்டும்பெற விழையவில்லை



☆ சிறப்பான சித்திரம் சிறப்பான சட்டத்துள்ளிருக்கிறது
☆ அவள் மனம் இக்கற்பனை லோகங்கட்குக் கட்டுப்படவில்லை
☆ க்ஷணச் சுதந்திரம் ஆனந்தமாக நிம்மதி
☆ சிறிய அளவு ஆனந்தம் தற்செயலாய் வந்த ஒரு மணி நேரம்
☆ மேல்மனம் ஆத்மாவுக்குச் சலிப்பூட்டுகிறது
☆ ரூபத்தின் அழகைக் கடந்து நின்ற கடவுள்அம்சம்
☆ ஆழ்ந்த நிலைகளும், மறந்த சக்திகளும் அழைக்கின்றன
☆ பெரிய ஜோதியைக் கடந்தது அவன் பார்வை
☆ மலை ஏறிய ஆத்மா கடந்ததை மறந்தது
☆ பெருநாட்களின் பெருவாழ்வை ஏற்ற அரசவை
☆ செல்வம் நிறை அச்சொர்க்கத்தை விட்டகன்றான்
☆ பெருவெளியின் அகன்ற வீச்சைக் கடந்தது அவன் கதி

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் பிரம்மத்தைத் தொட முடியும் என்கிறார் பகவான். மனமே பிரம்மத்தாலானது என்பதால் அதனால் முடியும். மனத்தில் பிரம்மமுள்ள இடத்தைத் தொட்டால் அதன் மூலம் பிரம்மத்தைத் தொடலாம்.

*தானே பிரம்மம் என்பதால்*
*மனம் பிரம்மத்தைத் தொடும்.*

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XX. Death, Desire, and Incapacity

This is a view. Page No.189
Life appears as a form of energy. Para No.3
It is an energy of consciousness.
It is intermediary.
It is appropriate to the action of Mind on Matter.
In a sense it may be said to be an energy aspect of Mind.
When it creates and relates itself no longer to ideas.
It relates to motions of force.
It also relates to forms of substance.
We must immediately add another thing.
Mind is not a separate entity.
All Supermind is behind it.
It is Supermind that creates with Mind.
Mind is its final individualising operation.
Life is also of separate entity or movement.
But has all Consciousness-Force behind it.
It exists and acts in created things.
Life is only its final operation.



## 20. மரணம், ஆசை, இயலாமை

இது வாழ்வைப் பற்றிய ஒரு கண்ணோட்டம்.
வாழ்வு சக்தி ரூபமாகக் காணப்படுகிறது.
அது ஜீவியத்தின் சக்தி.
வாழ்வு இடைப்பட்ட சக்தி.
மனம் ஜடத்தில் செயல்படுவதற்கு வாழ்வு பொருத்தமானது.
மனத்தின் சக்தி ரூபம் வாழ்வுஎனவும் கூற முடியும்.
வாழ்வு சிருஷ்டிக்கும்பொழுது கருத்துடன் தொடர்பு கொள்வதில்லை.
சக்தியின் சலனத்துடன் தொடர்பு கொண்டது வாழ்வு.
பொருள்களின் ரூபத்துடன் தொடர்பு கொண்டது.
உடன் கூற வேண்டியது ஒன்றுண்டு.
மனம் தனித்துச் செயல்படுவதில்லை.
சத்தியஜீவியம் அதன் பின்னுள்ளது.
சத்தியஜீவியம் மனம் சிருஷ்டிக்க உதவுகிறது.
சத்தியஜீவியம் தனிப்பட்டுச் செயல்படுவது மனத்தில்.
வாழ்வும் தனிப்பட்டுச் செயல்படும் சலனமன்று.
ஜீவிய-சக்தி அதன் பின்னுள்ளது.
அது உண்டு. சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களில் அது செயல்படுகிறது.
வாழ்வு அதன் முடிவான செயல்.

It is intermediary between Mind and Body.
This is a dependence.
All that we say must therefore be subject to this qualification.

We do not really know Life.
The Consciousness-Force is working in it.
It is only an external aspect.
It is an instrumentation.
We must be aware of it and grow conscious of it.
Until then we do not know the nature of life.
We cannot know either its process.
Then only we can pursue with knowledge.
We can so execute.
Such is the individual soul-form.
They are the mental instruments of the Divine.
They are bodily instruments too.
It is the Will of God in life.
Mind and Life proceed in paths and movements.
They are of ever-increasing straightness.
It is a path of the truth in ourselves and things.
There are crooked perversions of Ignorance.
The perversions shrink by constant diminishing.
Mind has to unite itself with Supermind.
It is separated from the Supermind by Avidya.
Life has to become aware of the Conscious-Force.
It operates in it.
It does so for ends with a meaning.
Of which life in us is unconscious.
It is so as it is absorbed.
It is absorbed in the mere process of living.



வாழ்வு மனத்திற்கும் உடலுக்கும் இடைப்பட்டது.
இது தொடர்பு.
நாம் கூறுவது அனைத்தும் இந்த நிபந்தனைக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.
நமக்கு வாழ்வு தெரியாது.
ஜீவிய சக்தி வாழ்வில் செயல்படுகிறது.
வாழ்வு புற அம்சம்.
வாழ்வு அதன் கருவி.
நாம் ஜீவிய சக்தியை அறிந்து உணர வேண்டும்.
அதுவரை வாழ்வின் சுபாவத்தை நாமறிய முடியாது.
வாழ்வின் வழிமுறையையும் நாம் அதுவரை அறிய முடியாது.
அப்பொழுது ஞானத்துடன் நாம் அதைத் தொடரலாம்.
அப்படியே செயல்படுத்தலாம்.
மனிதனின் ஆத்ம ரூபம் அது.
அவை இறைவனுடைய கருவி, மனத்திலுள்ளவை.
அவை உடலின் கருவியுமாகும்.
அது வாழ்வில் இறைவனின் திருவுள்ளம்.
மனமும், வாழ்வும் செல்லும் பாதையிது. அதுவே சலனமாகும்.
அப்பாதை நேராக நிமிரும் பாதை.
நம் சத்தியப் பாதையிது.
அவை அறியாமையின் கோணல் குதர்க்கம்.
இக்குதர்க்கம் விஷயத்தைத் தொடர்ந்து சுருக்கும்.
மனம் சத்தியஜீவியத்துடன் ஐக்கியமாக வேண்டும்.
அஞ்ஞானத்தால் மனம் சத்தியஜீவியத்தினின்று பிரிக்கப்படுகிறது.
வாழ்வு சித் சக்தியுடன் இணைய வேண்டும்.
அது வாழ்வில் செயல்படுகிறது.
ஒரு பலனுக்காக காரணத்துடன் அது அப்படிச் செயல்படுகிறது.
இச்செயல்பாட்டை நம் வாழ்வு அறியாது.
வாழ்வில் அது கிரகிக்கப்படுவதால் தெரிவதில்லை.
வாழ்வில் அது அப்படி கிரகிக்கப்படுகிறது.

Its action is darkened.
It serves them blindly.
It serves ignorantly and not luminously.
It must be so in its liberation.
It must serve with a self-fulfilling knowledge, power and bliss.

Our Life is subservient to Mind. Page No.190
Mind is darkened. Para No.4
Mind's operation divides.
Life undergoes all that subjection to death.
It is subjected to limitation, weakness.
It is also subjected to suffering and ignorant functioning.
Of which the bound and limited creature - Mind is the present cause.
There is an original source of perversion.
We have seen it.
The Individual soul is bound to ignorance.
It regards itself as separate.
To it all cosmic consciousness is a presentation.
The cosmos is a conscious form of the One.
It embraces all consciousness.
It embraces all will, all force and all being.

All enjoyment and all being are one with it.
Instead of this knowledge, it considers itself separate.
There is the universal life in us.
It obeys the direction of the soul.
Our soul is imprisoned in mind.
The universal life itself becomes imprisoned in the individual action.



வாழ்வில் செயல் கருமையுடையது.
கண்மூடி சேவை செய்கிறது.
அது ஒளியால் செயல்படவில்லை, அறியாமையால் நடக்கிறது.
விடுதலை பெற்றால் ஒளியால் செயல்பட வேண்டும்.
தன் நிறைவு பெறும் சக்தி, ஆனந்தத்தால் அது சேவை செய்யும்.

வாழ்வு மனத்திற்குப் பணிந்தது.
மனம் இருண்டது.
மனம் துண்டு செய்யும்.
வாழ்வு மரணத்திற்கு உட்பட்டது.
இயலாமைக்கும், வரையறைக்கும் உட்பட்டது.
அறியாத செயலுக்கும், துன்பத்திற்கும் உட்பட்டது.
கட்டுப்பட்ட வரையறைக்குட்பட்ட மனம் இவற்றிற்குக் காரணம்.

குதர்க்கத்திற்கு ஒரு மூலகாரணம் உண்டு.
நாம் அதைப் பார்த்தோம்.
ஆத்மா அஞ்ஞானத்தை ஏற்கிறது.
தன்னைத் தனித்த ரூபமாகக் காண்கிறது.
பிரபஞ்ச ஜீவியம் அதற்கு ஒரு தோற்றம்.
பிரபஞ்சம் ஏகனுடைய ஆத்ம ரூபம்.
அது எல்லா ஜீவியத்தையும் தழுவுகிறது.
எல்லா ஜீவனையும், எல்லா சக்தியையும், எல்லா உறுதியையும் அது தழுவுகிறது.
எல்லா ஜீவனும், அனுபவமும் அதனுடன் இணைந்தது.
இதை ஏற்காமல், தன்னைத் தனியாக ஆத்மா கருதுகிறது.
நம்முள் பிரபஞ்ச வாழ்வுண்டு.
ஆத்மாவின் அதிகாரத்தை அது ஏற்கிறது.
ஆத்மா மனத்துள் சிறைப்பட்டுள்ளது.
பிரபஞ்ச வாழ்வு தனி நபர் செயலுக்கு உட்படுகிறது.

It exists and acts as a separate life.
Its capacity is limited and insufficient.
It undergoes the shock and pressure.
They come from all life around.
It does not freely embrace it.
It is thrown into the cosmic interchange constantly.
The interchange is in the universe.
It is a poor, limited, individual existence.
Life at first helplessly suffers.
It obeys the giant interplay.
It reaction is mechanical.
Life is attacked, devoured, enjoyed, used and driven.
But consciousness develops.
It does so as the light of its own being emerges.
It emerges from the inner darkness.
It is a darkness of involutionary sleep.
The individual existence becomes dimly aware of the power in it.
It seeks it in two stages.
First it is nervous.
Next it is mental.
It is to master, use and enjoy the play.
This awakening is gradual to self.
It is an awakening to the Power.
For Life is Force.
Force is Power.
Power is Will.
Will is the working of the Master-Consciousness.
Life has its depths.
Life in the individual becomes more and more aware in the depths.



அது தனித்திருந்து தனியாகச் செயல்படுகிறது.
அதன் திறமை போதாது, அளவுக்குட்பட்டது.
எல்லா அழுத்தத்தையும், அதிர்ச்சியையும் ஏற்கிறது.
சுற்றியுள்ள வாழ்வு அவற்றைத் தருகிறது.
அவற்றை அவற்றிற்குக் கட்டுப்படாமல் ஏற்க அதனால் முடியவில்லை.
பிரபஞ்சத் தொடர்பில் அது இடையறாது இணைந்து இயங்குகிறது.
இத்தொடர்பு பிரபஞ்சத்திற்குரியது.
தனிநபர் வாழ்வு அளவுக்குட்பட்டது, தாழ்ந்தது.
ஆரம்பத்தில் வாழ்வு ஆதரவற்று சிரமப்படுகிறது.
பிரம்மாண்டமான தொடர்பை ஏற்றுள்ளது.
ஜீவனற்றுச் செயல்படுகிறது.
வாழ்வைத் தாக்கி, விழுங்கி, அனுபவித்துப் பயன்படுத்தி ஆள்கிறது.
ஜீவியம் வளர்கிறது.
தன் ஜீவஜோதி வளர்வதால், ஜீவியம் வளர்கிறது.
அக இருளினின்று ஜோதி எழுகிறது.
சிருஷ்டியின் உறக்கத்தின் இருள் அது.
ஜீவாத்மாவின் வாழ்வு லேசாக அதன் சக்தியை அறிகிறது.

இரண்டு கட்டங்களில் அச்சக்தியை நாடுகிறது.
முதலில் உணர்வால் தேடுகிறது.
அடுத்தாற்போல் அறிவால் நாடுகிறது.
லீலையை அடக்கி, பயன்படுத்தி, அனுபவிக்க முயல்கிறது.
ஆத்மாவுக்கு இவ்விழிப்பு படிப்படியாக வருவது.
இந்த விழிப்பு பவரையறியும்.
வாழ்வுஎன்பது சக்தி.
சக்தியென்பது பவர்.
பவர் உறுதியாகும்.
உறுதியென்பது புருஷ-ஜீவியம் செயல்படுவது.
வாழ்வு ஆழமானது.
மனித வாழ்வு தன் ஆழத்தில் விழித்தெழுகிறது.

It too is the Will-Force.
It is of Sachchidananda.
It is the master of the universe.
It aspires to be individually master.
It is mastery of its own world.
All individual life has its impulse.
It increases.
It tries to realise its power.
It also wants to master and know its world.
The increasing impulse does it.
Ours is cosmic existence.
The Divine manifests itself there.

*Contd….*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

கடந்த நாட்களின் அனுபவத்தின் சாரத்தை முழுமையாகப் பெறுதல் சைத்தியபுருஷனை அடைய உதவும். எந்த அளவில் இதைச் செய்ய முடிகிறதோ அந்த அளவில் சைத்தியபுருஷன் வெளிப்படும்.

***கடந்ததை மனதால் கடந்தால்***
***சைத்தியம் விழித்தெழும்.***



அதுவும் உறுதியின் சக்தி.
அதுவும் சச்சிதானந்தத்துடையது.
அது பிரபஞ்சத் தலைவன்.
தானும் தனிப்பட்ட முறையில் தலைமைபெற ஆவலுள்ளதாகயிருக்கிறது.
தன் உலகத் தலைமைபெற முயல்கிறது.
தனிநபர் வாழ்வுக்கு வேகமுண்டு.
அந்த வேகம் வளர்கிறது.
தன் சக்தியை அறிய முயல்கிறது.
தன் உலகை அறிந்து அதிகாரம் பெற முயல்கிறது.
வளரும் சக்தி அதைச் செய்கிறது.
நம் வாழ்வு பிரபஞ்ச வாழ்வு.
இறைவன் அங்கு தன்னை வெளிப்படுத்துகிறான்.

*தொடரும்….*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஆன்மா, ஜடப்பொருளை நிர்ணயிப்பது முடிவு. அதற்கு முன் ஆன்மா, மனத்தை நிர்ணயிக்க வேண்டும். ஆன்மா வாழ்வின் செயலை நிர்ணயிக்கும்.

இலட்சியத்தையடைய, ஆன்மா எண்ணத்தை நிர்ணயிப்பதும் செயல் ஆன்மாவைக் கட்டுப்படுத்தாததும் முதற்படிகளாகும்.

## ஏகன், அநேகன் இரண்டும் உள்ளது பிரம்மம் இருப்பதைக் காட்டுகிறது (P.126)

## மௌனம் செயலுக்கு ஆதாரம் (P.29)

ஏகன் அநேகனுக்கு எதிரானது.

மௌனம் பேச்சுக்கும் செயலுக்கும் எதிரானது.

டம்ளர் தண்ணீரில் உள்ள பென்சில் உடைந்திருப்பது கண்ணுக்குத் தெரிவது.

பார்வைக்கு உடைந்ததாகத் தெரிந்தாலும், உண்மையில் பென்சில் உடையவில்லைஎன மனம் அறியும்.

*மனமும், புலனும் எதிரெதிரானவற்றை அறிகின்றன.*

மனமும் சத்தியஜீவனும் எதிரெதிரானவற்றை அறிய வல்லன.

சத்தியஜீவியம் காண்பது உண்மை, ஞானம்.

மனம் காண்பது தோற்றம், அறியாமை.

பூமி செயலற்றிருப்பது தோற்றம்.

பூமி சுழல்வதும், சூரியனைச் சுற்றி வருவதும் விஞ்ஞான உண்மைகள்.

பூமியோ, சூரியனோ சுழலவில்லை, சுற்றி வரவில்லைஎன்பது ஆன்மீக உண்மை.

ருசியான பண்டம் சாப்பிட இனிமையானது - புலனறிவு.

உடல் நலத்திற்கு அது குந்தகம் விளைவிக்குமாஎன்பது அறிவுக்குரியது - மனத்தின் அறிவு.

நாம் வேகமாக ஓடும் விளையாட்டு வீரரைப் பார்க்கிறோம். அது சலனம், தீவிரச் சலனம்.

அவர் ஓட ஆரம்பிக்குமுன் அவர் மூச்சு, இரத்த ஓட்டம், பார்வை, காது, கால் தரையில் தொடுவது, நாடி, சக்தி ஆகிய



அனைத்தும் ஓட்டத்தை நடத்த க்ஷணத்தில் தயாராகின்றன. *தயாராக அவை மௌனமாகின்றன.*

அது நிதானம் - ஓடி, ஓடி ஜெயிக்க, நிதானம், மௌனம் அவசியம்.

நிதானம் குறைவானவருக்கு படபடப்பு வந்துவிடும்.

படபடப்பு ஜெயிக்க அனுமதிக்காது.

நிதானம் முழுமையாவது மௌனம் குடிகொள்வது.

மௌனம் அதிகரித்தால் நன்றாக ஓடலாம்.

மௌனம் பூரணமானால், ஜெயிப்பது நிச்சயம்.

மௌனம் - உடலின் மௌனம், ஜீவனின் மௌனம் - ஓட்டத்திற்குரிய சக்தியை அளிக்கிறது.

ஏகன், அநேகன் என்பதும் பிரம்மம், சிருஷ்டி (Relative) என்பதும் மௌனம், செயல் என்பதும் ரூபம், அரூபம் என்பதும் காலம், காலத்தைக் கடந்தது என்பதும், ஐக்கியம், பல என்பதும், குணம், அனந்த குணம் என்பதும், சகுணம், நிர்க்குணம் என்பதும் ஜீவன், ஜீவியம் என்பதும் புருஷன், பிரகிருதி என்பதும் தத்துவரீதியாக ஒன்றே.

❒ நாம் நினைக்கிறோம், அது அகம்.

நாம் பேசுகிறோம், அது புறம்.

அகமும் புறமும் காலமும் இடமும் ஒன்றே.

❥ புறம் மேல் மனத்திற்குரியது.

அகம் மேல் மனத்திலும், ஆழ்ந்த காலத்து உள் மனத்திலும் உறையும்.

புறத்திற்குரியது சலனம்.

அகத்திற்குரியது மௌனம்.

நிதானம் வளர்ந்தால் சலனம் மௌனமாகும் - புறம் அகமாகும்.

அந்நிலையில் நாம் முழுவதும் மேல்மனத்தினின்று உள்மனம் சென்றடைவோம்.

*உள்மனம் முழுவதும் மௌனத்திற்குரியது.*

*மௌனத்தின் பின்னுள்ள மௌனம் உள்மனத்திலில்லை.*

மேல்மனம் உள்மனமும் ஒன்றாகும் நிலை சலனம் மௌனமாகும் நிலை.

இம்மாற்றம் ஜீவியத்தில் வந்த நிலை இது.

இதே மாற்றம் பொருளில்வர முடியும்.

பொருளில் சலனம் மௌனமானால், மேல்மனம் உள்மனமாவது போல் அவை இணைந்த நிலை அடிமனமாகும்.

அடிமனம் - பிரபஞ்சமனம் - உயர்ந்து மேல்மனத்தில் வந்து செயல்படும் நிலையது.

❒ இதுவரை கூறியவை சலனம் மௌனமாகி மேல்மனம் உள்மனமாகவும், அடிமனமாகவும் மாறுவது.

இம்மாறுதலுக்கு அதே சமயம் வேறு ஒரு புறம் உண்டு. அது வேறு அம்சம்.

சலனம் பிரகிருதிக்குரியது. மௌனம் புருஷனுக்குரியது.

மௌனம் சலனத்துடன் இணைவது வளரும் புருஷனுக்கு - சைத்தியபுருஷனுக்கு - உரியது.

சலனம் மௌனமாகும் கட்டங்கள் புருஷன், பிரகிருதி இணைவது.

இணைவது பூர்த்தியானால், புருஷன் பரிணாம வளர்ச்சி பெறும்.

அந்த சைத்தியபுருஷனுக்குரிய லோகம் அடிமனம்.

சைத்தியபுருஷன் அடிமனத்தில் 3 கட்டங்களில் உறைகிறது.

முதற் கட்டம் - மனத்திற்குரிய சைத்தியபுருஷன்.

இரண்டாம் கட்டம் - உயிருக்குரிய சைத்தியபுருஷன்.

மூன்றாம் கட்டம் - உடலுக்குரிய சைத்தியபுருஷன்.

உடலுக்குரிய சைத்தியபுருஷனும் சத்தியஜீவனும் எதிரெதிரான பாதை வழி வந்து சந்திக்கின்றனர்.

மனம், உயிர், உடல்என சைத்தியபுருஷன் வளரும் பொழுது முனிவர்மனம், ரிஷிமனம், யோகிமனம், தெய்வீகமனத்தின் வழியாக மேல்நோக்கி சைத்திய புருஷன் வளர்ந்து சத்தியஜீவியத்தை சத்தியஜீவனாக அடையும்பொழுது அங்கே உடலின் சைத்தியபுருஷன் அவனுக்காகக் காத்திருப்பது தெரியும். கீழ்நோக்கியும், மேல்நோக்கியும் வளர்ந்த சைத்தியபுருஷன் சத்திய ஜீவியத்தில் சத்தியஜீவனாகிறது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இந்த தத்துவம் வாழ்வில் கடைப்பிடிக்கப்பட வேண்டுமானால்,

மனைவி கணவனை அதிகாரம் செய்யக்கூடாது. மேலதிகாரியைத் தன் கைக்குள் வைக்க நினைக்கக் கூடாது.

உரிமையில்லாததை மனம் விழையக் கூடாது.

அடுத்தவர் கண்ணோட்டத்தில் பிரச்சினையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தந்திர யுக்திகளைப் பயன்படுத்தக் கூடாது.

***பிரச்சினையைப் பிறர் நோக்கில் காணவேண்டும். தந்திரம் தவிர்க்கப்பட வேண்டும்.***

## அன்பர் கடிதம்

தவத்திரு கர்மயோகி அவர்களுக்கு அன்னை அன்பன் சந்தானம் எழுதிக்கொள்வது. வணக்கம். தங்களின் மலர்ந்த ஜீவியம், மற்றும் தங்களின் நூல்களைத் தொடர்ந்து படித்து வரும் பாக்யசாலிகளில் அடியேனும் ஒருவன். தங்களின் எழுத்துகள் மிகுந்த சக்தி வாய்ந்தவை. மனம் சற்றுத் தொய்வு அடையும் நேரத்தில் ஏதேனும் ஒரு பக்கம் எடுத்துப் படித்தால்கூட மனச்சோர்வு நீங்கி, உடலும் உள்ளமும் புத்துணர்வு பெற்றுத் தொடர்ந்து வேலைகளில் ஈடுபட முடிகிறது. தாங்கள் எழுதி வரும் சுத்தம், வருமானம் போன்ற கருத்துகள் நடைமுறையில் எளிதாகப் பயன்படுத்தக்கூடியவை. அன்னை அன்பர்களுக்கு இவை ஒரு கொடையாகும். உங்களின் கருத்துகளை நடைமுறைப்படுத்திக் கொண்டு நிறைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டுள்ளேன்.

நான் 2004ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற ஒரு மத்திய அரசு ஊழியன். சமீபத்தில் எனக்கு ஓய்வு ஊதிய உயர்வு காரணமாக அரியர்ஸ் தொகை ரூ.73,030/- என்று கணக்கிடப்பட்டு முதல் தவணை ரூ.29,213/- வழங்கப்பட்டது. அடுத்த தவணை ரூ.43,817/- 2009இல் வழங்கப்பட உள்ளது. நான் 1963 முதல் 2004 வரை 40 ஆண்டுகளுக்கும் மேலாக பணியில் இருந்த காலத்தில் இவ்வளவு பெரிய தொகையைப் பெற்றதில்லை.

தங்களுக்கும், தங்களின் கருத்துகளை தியான மைய சொற்பொழிவுகளில் விளக்கமாக உதாரணங்களுடன் கூறும் சொற்பொழிவாளர்களுக்கும், மற்றும் அங்குள்ள சேவை அன்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை சமர்ப்பித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*-- தங்களின் ஆசிகளை நாடும் அன்பன் சந்தானம், சென்னை.*

❀ ❀ ❀



## யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**986) நெருங்கி வாழ்ந்தால் ஜீவனற்று விரக்தி ஏற்படும். நிலையுயர்ந்தால் நெருக்கமான வாழ்வு நெருக்கத்தின் இனிமையையும் நிறைவையும் தரும். ஆதாயம் முதல் நிலை, அர்ப்பணம் அடுத்தது.**

***ஆதாயம் முதல் நிலை. அர்ப்பணம் அடுத்தது.***

பழகப் பழகப் பாலும் புளிக்கும்என்பது ஜீவனற்ற உடல்கள் உடன் உறைவது. எளிய மனிதர்கள் ஒரே ஆபீஸில் வேலை செய்தாலும், அருகில் குடியிருந்தாலும், உறவினரானாலும், வேலை நிமித்தமாக அடிக்கடி சந்தித்தாலும் நட்பு உற்பத்தியாகிறது. இது வலுவானதன்று. இருக்கும்வரை நெருக்கமாக இருக்கும். மாறிவிட்டால் அதேபோல் புதிய மனிதனுடன் பழகுவார்கள். அதைப் பழகிய தோஷம் (habitual affection) எனக் கூறுவதுண்டு.

வேறு வகையான உறவுண்டு. அங்கு நாளாக நாளாக ஒருவருக்கு அடுத்தவரை அதிகமாகப் புரியும். அதிகமாகப் புரிந்தால் அதிகமாகப் பிடிக்கும். பிடிக்கும் என்பதால் இல்லாமல் முடியாது. நெருக்கம் அதிகமாகும். நெருக்கத்தில் இனிமை வளரும். இருவரும் ஒரே இலட்சியத்திற்காக வேலை செய்தால் இலட்சியம் மேலும் மேலும் அதிகமாகப் புரியும். புரிவதால் நெருக்கமும், இனிமையும் ஏற்படும். அப்படி தம்பதிகளிருப்பதுண்டு. தாயும் மகனும் அப்படி உணர்வதுண்டு. தலைவரும், தொண்டரும் அதுபோல் இணைவதுண்டு. **அன்னை பகவானுக்கு அது போலிருந்தார்**.

இரண்டாண்டுமுன் - 1950க்குமுன் - பகவான் அன்னையுடன் பேசும்பொழுது யோகம் உள்ள நிலையையும், அதன் எதிர்காலமும் விவாதத்திற்கு வந்தபொழுது இருவரில் ஒருவர் சூட்சும உலகுக்குப்

போய் வேலையைத் தொடர்ந்தால் நம் வாழ்நாளில் பூர்த்தியாகாதது பூர்த்தியாகும் என்றார். அன்னை தான் போவதாகக் கூறினார். அதை அன்னை மறந்துவிட்டார். 1950இல் டிசம்பர் 5ஆம் தேதிக்கு முன் பகவான் நோய்வாய்ப்பட்ட பொழுது அன்னைக்கு முந்தைய உரையாடல் நினைவு வந்தது. அத்துடன் அந்த உரையாடலை தான் மறக்க வேண்டும்என பகவான் செய்ததையும் கண்டார். பகவான் உடலை விட்டுப்போக அன்னை சம்மதிக்கவில்லை. சூட்சுமமாக பகவானுக்கும், அன்னைக்கும் போராட்டம் தொடர்ந்தது. **அதனால்தான் கடைசி நாட்களில் பகவானுக்கு சிரமம் ஏற்பட்டது எனவும் அன்னை கூறினார்**.

பகவான் உடலை நீத்தவுடன் அவர் உடலிலிருந்த சத்தியஜீவிய சக்தி அன்னை உடலுள் வருவதை அன்னை உணர்ந்தார். அது உரசுவதையும் கண்டார். முன்பே நினைவிருந்தால் நான் பகவானை போக விட்டிருக்கமாட்டேன். என் சம்மதமில்லாததால்தான் அவருக்கு வேதனை எழுந்தது என்றார். அவர்கள் பேசும்பொழுது மற்றவர்கள் கேட்டுக் கொண்டிருந்தால் அது புரியாது. பேச்சில் பல கட்டங்களை பேசாமல் இருவரும் புரிந்து கொள்வார்கள். நடுவில் பேச்சு விட்டுப் போவதால் மற்றவர்க்குப் புரியாது.

சாஷ்டாங்க நமஸ்காரம் வெளிநாட்டார் அறியாதது, பார்த்ததில்லை. முதன்முறை அன்னை பகவானை கணவருடன் சந்தித்தார். கணவர் எலக்ஷனில் நிற்கிறார். பகவானுடன் அதைப் பேச வந்தார். அன்னை சாஷ்டாங்கமாக பகவானுக்கு நமஸ்காரம் செய்துவிட்டு தரையில் உட்கார்ந்தார். பகவான் ஒரு முறையும் காலை சம்மணமிட்டு தரையில் உட்கார்ந்ததில்லை. அன்னை பிறந்ததிலிருந்து தரையில் உட்கார்ந்ததேயில்லை. பகவான் முன்னும் இயல்பாக அவரால் நாற்காலியில் உட்கார முடியவில்லை. கணவரும் பகவானும் பேசும்பொழுது தம் தலையில் ஏதோ நடப்பதாக அன்னை அறிந்தார். அது மௌனம், மௌனத்தின் பின்னுள்ள மௌனம். கடைசிவரை தன்னுடனிருந்ததாகக் கூறினார்.

***ஜீவனுள்ள வாழ்வு நெருக்கத்தால் நெகிழ்ந்து மலரும்.***

○ ○ ○



**987) இறைவனோடு வாழும்பொழுது அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் நிலை அதிக நெருக்கத்தை அளிக்கிறது. தன்னை அர்ப்பணம் செய்வதே பெறும் திறனை நிர்ணயிக்கும்.**

***தன்னை அர்ப்பணம் செய்வதே பெறும் திறனை நிர்ணயிக்கும்.***

இந்தியாவிலிருந்து அமெரிக்கா போய் நிரந்தரமாகத் தங்குபவர்கள் அதுவும் பெண்கள், ஊர் உலகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் அங்கு முதலில் காண்பது

- எவரும் தன்னை அருவருப்பாக நடத்தவில்லை.
- ***இந்தியாவில் காணாத நினைக்க முடியாத மரியாதையை அனுபவிக்கிறோம்.***
- சமையல் எனில் ¾ பங்கு சமையல் செய்த பொருள்களை அப்படியே வாங்கி சூடு செய்து சாப்பிடலாம்.
- போலீஸைக் கூப்பிட நேர்ந்தால் செல்வாக்குள்ளவர், பணம் தேவையில்லை. போனில் கூப்பிட்டால் உடனே வருகிறார்கள்.
- அங்குள்ள வசதிகள் அனைவருக்கும் இலவசமாக உரியன. நம் நாட்டில் கிராமத்திலிருந்து அமெரிக்கா போய் தங்கியவர் பெறும் வசதிகளை அனைவரும் எளிதிலறியலாம்.

மனித வாழ்வில் இறைவன் க்ஷணம்தோறும் செயல்படுவது தெரிவதில்லை. அமெரிக்கா ஆயிரம் வசதிகளைத் தந்தால் ஆண்டவன் தரும் வசதிகள் இலட்சக்கணக்கானவை. மூச்சு விடுவது அவனால், எடுத்து வைத்த காலைத் தாங்குவது பூமி, வாயில் போட்ட சாப்பாடு உள்ளே போய் ஜீரணமாவது நம்மாலில்லை, ஆண்டவனால். நிமிஷத்திற்கு 10 முறை இமைக்கும் கண் பார்ப்பதும், பார்வை தெளிவாக இருப்பதும், நம் குரல் அடுத்தவருக்குக் கேட்பதும், உலகம் நடக்க உரிய **செயல்களை ஆண்டவன் தாங்கி, ஆதரித்து, நடத்துவதால்என நாம் கண்டு கொள்வதில்லை**. அன்னையுடனும்,

பகவானுடனும் இருந்தவர் ஏராளம். அவர்கள் வாழ்வை ஆண்டவனே நேரடியாக நடத்தினார். அன்பர்கள் சூட்சுமப் பார்வையுள்ளவரானால், நம் சூழலில் அன்னையிருப்பதை நாம் கண்கூடாக அறியலாம். எவர் வந்தாலும், எது நடந்தாலும் அன்னை அதை நடத்தி வைப்பதை உணரலாம்.

*அது இறைவனுடன் வாழ்வதாகும்.*

குருக்கள் ஊருக்குப் போனபொழுது மகனிடம் தன் கடமையை ஒப்படைத்துவிட்டுப் போனார். குருக்களுக்குப் பூஜை சம்பிரதாயம், ஸ்லோகம் சொல்வது, அர்ச்சனை செய்வது, நைவேத்தியம் செய்வன முறைமை, கடமை, சடங்கு. மகனுக்கு அவை பவித்திரமானவை. உணர்ந்து செய்தான். நைவேத்தியம் வந்தது.

- பையனுக்கு அது விக்ரஹமில்லை, சிவபெருமான்.
- *சுவாமி வெளிவந்து நைவேத்தியத்தை சாப்பிட்டுவிட்டார்.*

குருக்களே நம்ப முடியவில்லை என்பது கதை. சூழலில் அன்னையிருப்பதை அறியும் அன்பர்க்கு அன்னை கொடுப்பவை, அபரிமிதமாகக் கொடுப்பவை தெரியும். தெரியும் என்பதால் பெறும் பாக்கியத்தை உணர முடியும். பெறுவதைவிட அன்னை நம்மோடு தொடர்பு கொள்வதை அறிய முடியும்.

- அதைக் கண்ணுற்றபின் பெறுவது தெரியாது.
- ஏந்திய கைகளால் அவற்றைப் பெற முடியாது.
- *சமர்ப்பணத்தால்மட்டுமே அவற்றைப் பெற முடியும்.*
- அந்த உறவு நம்முடையதில்லை.
- அது உடலுடைய உறவன்று.
- உயிர் கொண்ட தொடர்பில்லை.
- மனம் அறிந்த தொடர்பில்லை.
- அது ஜீவன் அன்னையுடன் கொண்ட உறவு.
- இடையேயுள்ளது இடைவெளியன்று, பொருளன்று.

○ ○ ○



**988) நீ அழிக்க விரும்புகிறவரிடமிருந்து மேலும் மேலும் பெற விழைவதன் காரணங்கள் பல.**

***1. வெட்கம் கெட்ட அல்ப புத்தி.***
***2. பலமில்லாத நேரத்தில் பிறரை ஆள நினைப்பது.***
***3. நற்பண்பில்லாத நிலை.***
***4. பிறரை இறைவன் கருவியாக்க தன்னையறியாத உத்வேகம்.***

பொதுவாக மனிதனுக்குப் பிறருக்கு உதவத் தோன்றுவ-தில்லை. நல்லவனாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தால் அதைச் செய்கிறான். பிறரை அழிக்க மனிதனுக்கு சாதாரணமாகத் தோன்றாது. நிலைமை, பட்ட கஷ்டம், துரோகத்திற்குப் பலியானது அவனை அப்படி நடக்கச் சொல்லும். வாழ்க்கையில் தோற்றவனுக்கு இப்பொழுது உடனிருப்பவனை அழிக்கத் தோன்றும். இது இயல்பாக இருக்கும் குணமில்லை. **இயல்பாகப் பிறரை அழிக்கத் தோன்றுவது பிறப்பு அரிபொருள். இயல்பாக பிறருக்கு உதவத் தோன்றுவதும் அரிது**. கடந்த காலம் நிகழ்காலத்தை நிர்ணயிக்கிறது. இதுவரைப் பரவலாகக் காணலாம். இதற்கடுத்த கட்டம் யாரை அழிக்க விரும்புகிறாரோ அவரிடமிருந்து உதவி பெற விரும்புவது. நாம் இதை வெட்கம் கெட்ட புத்தி, அல்பமான குணம் என அறிகிறோம். அது உண்மை. மேலும் ஓர் உண்மையுண்டு. அப்படிப் பெறும் உதவி அவருடைய தொடர்பை ஏற்படுத்தி உறுதிப்படுத்தும். **அந்தத் தொடர்பு மூலம் உதவி செய்தவரை நிச்சயமாக அழிக்க முடியும்**. அல்ப புத்தியைக் கடந்தபின் ஆழத்திலுள்ள நோக்கம் இது. இப்படிப்பட்டவர் உதவி கேட்டால், கெஞ்சிக் கேட்பார்கள், கண்ணீர் விட்டுக் கதறிக் கேட்டவருக்கு உதவிய அன்பரை மறுநாள் பெற்ற உதவியை தலைகீழே மாற்றி என்னைத் துரோகம் செய்துவிட்டான் எனப் பறைசாற்றினான் அந்த உதவி பெற்றவன். கெஞ்சி கேட்டுப் பணம் கடனாகப் பெற்றால், பணம் கையில் வந்தவுடன் தாறுமாறாகப் பேசுவார்கள், திட்டுவார்கள். அவர்கள் போக்கைக் கண்டு ஒதுங்கினால் இந்தப் பணத்தை மீண்டும் வாங்க முடியுமாஎன சவால் விடுவார்கள். ஏதோ ஒரு வகையில் நிலைமை ஒத்து வந்து பணத்தை

வாங்கிவிட்டால் கெட்டிக்காரன் யாரையும் ஏமாற்ற விடமாட்டான் என்பார். பலசாலிக்குப் பலர் கட்டுப்படுவார்கள். பலமற்றவர்க்கு எவரும் கட்டுப்படமாட்டார்கள். பலமில்லாவிட்டாலும் யாரையும் ஆள மனம் விழையும். அம்மனநிலையில் இதுபோல் மக்கள் பழகுவார்கள்.

நமக்குச் சில சமயங்களில் அதிர்ஷ்டம் தெரிந்தவர், உரிமையுள்ளவர், உடனிருப்பவர்மூலம் வரும். ஏதோ சமயம் முகம் தெரியாதவர்மூலம் வரும். ஒருவர் அதிர்ஷ்டம்பெற இறைவன் மற்றொருவரைக் கருவியாக்கினால் அதுபோன்ற நிகழ்ச்சி நடக்கும். **அதேபோல் ஒருவர் கர்மம் பூர்த்தியாக இறைவன் மற்றொருவரைத் தூண்டுவதும் உண்டு**. நான் 'சும்மா இருந்தேன். இந்த மனிதன் தூண்டுதலால் தவறு செய்தேன். இது என் கர்மவினைபோலும்' என்று நினைப்பதுண்டு.

அன்பர் இறைவனை ஏற்று இறைவன் கருவியாக வேண்டுமானால் அவருக்குப் பற்று, பாசம், கடமை, கர்மம், சகல தர்மங்களிலும் நம்பிக்கை போக வேண்டும். இக்காரியங்களைச் செய்ய அன்பரைத் தூண்ட பிறருக்குத் தோன்றும். அதனால் அன்பர் இறைவனுக்குத் தொண்டு செய்வார். இறைவன் கருவியாவார். அதை நல்ல மனிதர்கள் மூலம் இறைவன் செய்கிறார். குருமூலம் தீட்சை கொடுத்துச் செய்கிறார். பெரிய உதவிபெற ஒருவரைக் கேட்கச் சொல்லி அந்த உதவிமூலம் அன்பர் பலன் பெறுகிறார். **மட்டமான மனிதர்களும் அத்தொண்டுக்கு விலக்கன்று**. இறைவனுக்கு உயர்ந்தவரும், தாழ்ந்தவரும் ஒன்றே. உயர்ந்தோர் செய்யும் சேவையைத் தாழ்ந்தோரும் செய்ய இறைவன் மனிதனுக்கு அல்ப புத்தி, பிறரை ஆள நினைப்பது, போன்ற எண்ணங்களை எழுப்புகிறான். உதவி செய்பவரை அழிக்கச் சொல்கிறான்.

ｏｏｏ

## 989) பகவான் வாழ்வு அவருடைய தத்துவத்தைவிட வலுவான சூழலுடையது.

***தத்துவத்தைவிட வலுவான வாழ்வு.***



தத்துவம் வலுவானது. ஆனால் அறிவு அதைப் புரிந்து வாழ்வுக்குத் தரவேண்டும். அவர் வாழ்வைப் பற்றிப் படிக்கும்பொழுது பகவான் வாழ்வு நம் வாழ்வை நேரடியாகத் தொடுவதால் சூழல் உடனே கனத்துவிடும். இதைச் சில நிகழ்ச்சிகள் நடைமுறையில் கண்டன.

- கட்டுப்பாடில்லாத சப்தமான வகுப்பில் பகவான் எழுதியதை ஒரு பகுதி எடுத்துப் படிக்க ஆரம்பித்தவுடன் சப்தம் அடங்கி, கட்டுப்பாடு எழுந்தது.
- ஆயிரம் பேர் சைக்கிள் செயின், மண்ணெண்ணையுடன் ஒரு ஆபீசைக் கொளுத்த வந்தபொழுது போலீஸ் சுட உத்தரவிட்டது. கூட்டம் ஆவேசமாக மாறியது. நிலைமை கொந்தளித்து எழுந்தது. தூரத்து மாடியிலிருந்த அன்பர்கள் சிலர் பால்கனியில் வந்து பகவான் பெயரை உச்சரித்த அதே நிமிஷம் கொந்தளிப்பு அடங்கி கூட்டம் கலைந்தது.
- 50 பேர் ஆவேசமாக 5 பேரைத் தாக்க முனைந்தபொழுது 5 பேரில் ஒருவர் பாண்டிச்சேரியை போனில் கூப்பிட்டு நிலைமை படுமோசமாக இருக்கிறது என்றார். "உன்னால் பகவானை நினைக்க முடியுமா?" எனக் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுது கூட்டம் ஆவேசம் அடங்கிவிட்டதுஎனப் பதில் வந்தது.
- ரிஷி செய்யும் தவத்தில் பாதி ரிஷி பத்தினிக்குஎன்பது வழக்கு. இந்த வழக்கு உடன்கட்டை ஏறும் காலத்து வழக்கு. கணவனுக்கு விஷம் கொடுத்துக் கொல்வது பரவலாக இருந்த பொழுது, அதைத் தடுக்க வடமேற்கு இந்தியா, (Persia) பெர்ஷியா நாடுகளில் உடன்கட்டை ஏறுவது ஏற்பட்டு இந்தியா முழுவதும் பரவியதாக ஓர் ஆராய்ச்சி. கைபர் கணவாய்க்கு மேற்கே நடந்த போரில் ஒரு வீரன் இறந்துவிட்டான். அவனுக்கு இரு மனைவிகள். இருவரும் உடன்கட்டை ஏறப் போட்டி போட்டனர். இராணுவ அதிகாரிகளிடம் வழக்குப் போயிற்று. ஒருத்திக்கு அவ்வுரிமையைத் தந்தனர். அடுத்தவள் மனம் வெறுத்து தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு அலறி அழுதாள். உரிமை பெற்றவள் முகமலர்ச்சியுடன் உடன்கட்டை ஏறித் தழல்

**அவளைச் சூழ்ந்தபொழுது உடல் அசையாமல், ஆரவாரம் செய்து அழாமல், சிரித்த முகத்துடன் எரிந்து போனாள்**. இது வேறொரு செய்தி ஆராய்ச்சியாளர் கூறுவது.

❒ ஆணுக்குப் பெண் அவசியம்.

தவத்தைவிட ரிஷிக்கு மனைவி முக்கியம்.

ஆண் மனநிறைவுக்காகப் பெண்ணை நாடுகிறான்.

***அவன் மனம் பெண்ணால், பெண்ணில் நிறைவு பெறுகிறது.***

பெண்ணுக்கு பிள்ளைகள் முக்கியம்.

இறைவனையடைந்தாலும் இறைவனைப் பெண்ணாக வரிப்பது தவம்.

அதற்கடுத்த கட்டத்தில் - ஸ்ரீ அரவிந்தம் - தானே பெண்ணாக மாறி இறைவன் அனுபவிக்க வேண்டுவது ஆண்மை ஆன்மீக நிறைவு பெறுவது.

❒ ***யோகம் வாழ்வில் நிறைவு பெறுகிறது.***

அதனால் ரிஷி பெற்றதில் பாதி பத்தினிக்குண்டு.

வாழ்வில் நிறைவு பெறுவதால் பெண் பெருமையடைகிறாள்.

பகவான் வாழ்ந்த விபரங்களைப் படிக்கும்பொழுது அவர் தத்துவத்தைப் படிக்கும் சூழல் எழுகிறது.

அலிப்பூர் ஜெயிலில் இன்றும் அவர் சூழல் உண்டு.

அவர் சொல்லை மறக்காத இடங்களில் அவர் சூழல் ஜீவனோடு இருக்கிறது.

நிர்வாகம், சாதகர்கள், பகவான் கூறியதை மறுத்தால் அந்த இடத்தில் அவர் சூழலிருக்காது.

இருக்காது என்பதுடன் அங்கு வரும் அன்பர்களை பகவானை மறுத்த சூழல் சூழும்.

○ ○ ○

**990) ஆழ் மனத்தில் விரும்பிச் சேர்த்து இன்று மறந்தவை பின்னர் புதிய கருத்துகளாக (original ideas) எழும்.**



***எழுந்து மறந்தவை புதியதுபோல் பூக்கும்.***

➻ **கண்ணில் பட்டு மனதைத் தொட்டது அனுபவத்தால் செறிந்து முதிர்ச்சியடைந்து அனைவரும் பயன்படும் எண்ணமாக மனதில் உருவம் பெற்று உலகம் பயன்பெற ஒரு வாழ்நாள் அனுபவம் தேவை**. பரந்த நிலமுள்ளவர் செடி நடுவார்கள். விதை ஊன்றுவார்கள். அதுவும் சிறுவர்களாக இருக்கும்பொழுது ஆர்வமாகச் செய்யும் செயல் இது. வாழ்க்கை அதன் போக்கில் அவரை ஆயிரம் இடம் அழைத்துச் செல்லும். நட்ட செடி, ஊன்றிய விதை, அந்த இடம், அந்த ஆர்வம் பெரும்பாலும் மறந்துவிடும். சிலருக்கு நினைவிருக்கும். விதை ஊன்றியது முளைத்து செடியாகி மரமாகி பழுத்து பலர் கவனத்தையும் இழுத்தபொழுது ஊன்றியவரே அதைக் காண நேரிட்டால், முளைக்காத விதைகள், மாடு தின்ற செடிகள், வெட்டி வீழ்த்திய மரங்கள் தெரியாது. **தான் நட்டதும் மறந்துபோகும்**. மரமும், பழமும், பலனும் திடீரெனத் தோன்றியதாக நினைப்பார்.

❒ எண்ணங்கள் தோன்றி மறைந்து மீண்டும் இதுபோல் புதிய கருத்தாக எழுவது மனித சுபாவத்தின் அனுபவம்.

➻ நீண்ட குச்சியால் தரையை சிறுவன் அடிக்கும்பொழுது பாட்டி அடிக்காதே, பூமாதேவிக்கு வலிக்கும் என்றார்.

➻ அண்ணனுக்கு பெரிய சம்பந்தம் வந்தபொழுது தம்பி தனக்கு இதுபோல் வரவில்லையென நினைத்தால் அது சரியான நினைவில்லை. **இன்றைய நினைவு நாளைய செயல்என எதிர்வீட்டு விஷயம் நம் வீட்டில் பேசியதைச் சிறுவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்**.

➻ 3ஆம் வகுப்பில் படிக்கும்பொழுது ஆசிரியர் சொல்லிய கதையைக் கேட்டு நான் பெரியவனானால் இதைப்போல் நானும் பிறருக்குப் பேர்உதவியை என்னைத் தியாகம் செய்து செய்வேன்என மாணவன் நினைக்கிறான்.

➻ பெர்னார்ட்ஷா பள்ளிக்குப் போகவில்லை. அதனால் மேதையானார்என்று அன்று கேட்டது 50 ஆண்டு கழித்து

மனத்தில் துளிர்க்கிறது.

- நெல்லை எடுத்துப் போட்டால் அடுத்தவர் கல்லை எடுத்து எறிவார்என்பது நாம் கேட்ட சொல்.
- அக்கா பெண் விருத்திக்கு வாராதுஎன ஆயிரம் முறை வீட்டிலும், ஊரிலும் கேட்டதுண்டு.
- மருமகன் வீட்டிலிருந்தால், மகனைப் பாதிக்கும்என்பது வழக்கு.
- இரண்டாம் திருமணம் சட்டபூர்வமான காலத்தில் திருமணமான பின் கொஞ்ச நாள் கழித்து மனைவியின் தங்கையை மணம் புரிவது சகஜம்என ஊரறியும்.
- 30 ஆண்டு வாழ்ந்தவனுமில்லை, 30 ஆண்டு கெட்டவனுமில்லை என்பது உண்டு.
- **பொன்னை முடிந்தால் இருக்கும், பொய்யை முடிந்தால் இருக்காது**.

ஊரார் பேசியது, வீட்டார் கற்றுக் கொடுத்தது, நாமே படித்தது, சொந்தமாக இளம் வயதில் மனத்தில் எழுந்தவை ஆயிரம். அவை நினைவிருக்காதது சட்டம். 30 ஆண்டு, 50 ஆண்டு கழித்து ஊரில் ஒருவர் தற்கொலை செய்துகொண்டதாகப் பேசுகின்றனர். இவர் தொழிலை விட்டுவிட்டு புதுத் தொழில் செய்து தோல்வியடைந்து 17 தொழிலும் அழிந்து கடன் அதிகமாகி, வாழ்வை முடித்துக் கொண்டார். அடிநாளில் பெரிய இலாபம் சம்பாதித்துக் கொடுத்த பார்ட்னரைத் துரோகம் செய்தார்எனப் பேசும்பொழுது,

*செய்த துரோகம் மறக்காது, பழி வாங்கும்*

என்று ஞானோதயம்போல் தோன்றுகிறது. அடிக்கடி நினைவு வருகிறது. அதுபோன்றவை கண்ணில் படுகின்றது. கருத்தைத் தொட்டு எண்ணமாக மலர்ந்து இலட்சியமாக மணம் வீசுகின்றன. பலரிடம் அதையே பேச முடிகிறது. நம் குழந்தைகள் இதை ஏற்க வேண்டும்என அடிக்கடி கூறுகிறோம்.

அண்ணனுக்கு நம் குடும்பத்திற்கு எட்டாத பெரிய சம்பந்தம் வந்தபொழுது இது எனக்கு வேண்டும்என நினைத்துப் பேசியதை



அனைவரும் மறுத்தனர். எல்லா வசதிகளும் இருந்து என் திருமணம் 7,8 ஆண்டு தள்ளிப்போனது அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது, எனக்கில்லை. பிறகு திருமணம் நடந்தபொழுது அது அண்ணனுக்கு நேர் எதிராக வந்து என் மானத்தை வாங்கியது. நெடுநாள் மனம் புழுங்கியது. என் மகள் திருமணத்தில் தவறு வரக்கூடாதுஎன இடைவிடாது பிரார்த்தித்தேன். நல்லபடியாக முடிந்தது. ஒரு நாள் திடீரென,

*பொறாமை நினைப்பு பாதிக்கும்,*

என ஞானம் உதயமாயிற்று.

30 வயதில் 3000 ரூபாயைப் பெருமுதலாக நினைத்துத் தேடினேன். உடனே கிடைத்தது. 3000 வரும்பொழுது இலட்சமாயிற்று. இலட்சம் தொழிலில் 30 இலட்சமாக குறுகிய காலத்தில் வளர்ந்தது. அதன் பெருக்கம் ஒன்றுமில்லை என்பதுபோல் இலட்சம் மறந்து அனைத்தும் கோடியாயிற்று. பட்டது பெரிய பாடு, பெற்றது பெரிய பேறு. அனுபவங்களை ஆராயும் நேரம் வந்தது. சரித்திரம், அரசியல், பிறர் வாழ்வு, படிப்பு, ஆராய்ச்சி, சிந்தனை மலர்ந்தன.

*நல்லெண்ணம் பெரிய சொத்து*

என மனம் திடீரென முடிவு செய்தது. அதன் பலனைப் பல இடங்களிலும் ஆராய்ந்து மனம் ஆச்சரியப்பட்டது. திகைப்பான மலர்ச்சி தினமும் மனத்தைத் திளைக்கச் செய்தது. சிறு வயதில் பலர் நல்லெண்ணம் பலித்ததைப் பற்றிக் கேள்விப்பட்டது, படித்தது, அதை ஏற்க வேண்டும்என ஆழ்ந்து எடுத்த முடிவு எல்லாம் மறந்து போனது நினைவுக்கு வருகிறது.

*தொடரும்.....*

❀ ❀ ❀

**ஜீவிய மணி**

**அகந்தையை அகற்றும் சரணாகதி.**

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

156. *சமுத்திரம் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டது.*

- **சகலமும் கட்டுப்பட்டது சத்தியத்திற்கே.**

157. *நாவினால் சுட்ட புண் ஆறாது.*

- **வேண்டுமென்று செய்த தவறு தவறாமல் பாதிக்கும்.**

158. *அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.*

- **பக்தியின் பரவசம் முகத்தின் தேஜஸில் தெரியும்.**

159. *பார்க்காத பயிர் கெட்டுவிடும்.*
*கேட்காத கடன் வாராது.*

- **கேட்காததால் கடன் வரும்.**

160. *தீராத ஆசை.*

- **தணியாத சமர்ப்பணம்.**

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒற்றன் சர்க்காருக்கு இன்றியமையாத கருவி. கோள் சொல்லுதல் மட்டமான மனிதசுபாவம். அடிப்படையில் இரண்டும் ஒன்றே.

***ஒற்றனும் கோள் சொல்பவனும் ஒன்றே.***



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## எப்பொழுதும் பிரம்மத்தின் முன்னிருப்பது பிரம்ம ஜீவியம்

சாதாரணமாக வாழ்க்கை நடத்தும்பொழுது நம் வீட்டிற்கு வருபவர்கள் சாதாரணமாக இருப்பார்கள். நம்மைப் போலிருப்பார்கள். கவர்னர் நம் வீட்டிற்கு வருவதில்லை. கலெக்டரும் வருவதில்லை. நம் இலாக்கா தலைவரும் வருவதில்லை. அதுபோல் தெய்வ நம்பிக்கையுள்ளவர் வாழ்வில் ஆன்மீக அனுபவங்கள் ஏற்படுவதில்லை. பொதுவாக நம்பிக்கையுள்ளவர்க்குப் பிரார்த்தனை பலிக்கும். நம்பிக்கை அதிகமானால் ஆண்டவன் சோதனை செய்வார்.

அசரீரி மனதில் கேட்பது, மௌனம் வந்து போவது, தியானத்தில் தெய்வம் தரிசனம் தருவது போன்றவை ஆன்மீக அனுபவங்கள். அன்னை பக்தர்கட்கு இவை அரிபொருளாக நடப்பதுண்டு. சாதகர்கள் ஆசிரமத்தில் என்ன சாதித்தார்கள் என்று பகவானைக் கேட்டபொழுது சுமார் 6 அல்லது 7 பேர் பிரம்ம ஜீவியம் பெற்றுள்ளனர் என்றார். சம்பந்தப்பட்ட சாதகர்கட்கே அது தெரியுமா எனத் தெரியாது.

- Divine Soul தெய்வீக ஆன்மா எப்பொழுதும் பிரம்மத்தின் முன்னிலையில் வாழ்கிறதுஎன்று *The Life Divine* கூறுகிறது.

சித்தி பெறுவது வேறு, பெற்றோம்என அறிவது வேறு. தான் அவதாரபுருஷன் என்பதை பகவான் நெடுநாள் அறியவில்லை. நமக்கு ஓர் ஆன்மீக அனுபவம் ஏற்பட்டால் அனுபவமுள்ளவர் எடுத்து விளக்கமாகச் சொன்னால்தான் நமக்கு அது புரியும். இதன் விளைவு இரண்டு.

- ஆன்மீக அனுபவம் பெறுபவர்கள் அதை வெகுநாள் அறியார்.
- அன்னையை வழிபடுவதால், புத்தகம் படிப்பதால் தமக்கு

ஆன்மீக அனுபவங்கள் ஏற்பட்டனஎனத் தவறாக நினைத்துக் கொள்வது.

இரண்டும் தவிர்க்க முடியாதது. தியானத்தில் மெய்மறப்பது, உடல் மறைந்து போவது, சுற்றியுள்ள உலகம் அலையலையாக மாறுவது, மண்டையோடு பெரிதாக மாறுவதுபோன்ற உணர்வு, திடப் பொருள்கள் திடத்தன்மையை இழப்பது, அகண்ட வானம் நெஞ்சில் தெரிவது, க்ஷணம் அகண்ட மௌனம் மனத்தை ஆட்கொள்வது போன்றவை பிரம்ம ஜீவியம் நம்மைத் தீண்டுவதைக் காட்டும்.

- சுவர் அலையலையாக மாறுவது தியானத்தின்பொழுது தோன்றுவதுண்டு.
- நாம் பிரம்மத்தின் முன்னிருப்பதை அது காட்டும்.
- பிரம்மம் நம்மைத் தீண்டுவதற்கு அது அடையாளம்.
- அந்த அனுபவம் ஒருவருக்கு ஏற்பட்டால் பெரிய மனிதர் நம் வீடு தேடி வருவதுபோலாகும்.
- அப்படிப்பட்டவருக்கு ''யோகம் பலிக்கும்'' என்ற செய்தி வருகிறது.
- பெரிய மனிதர் நம் வீடு தேடி வந்தால் "வாழ்க்கை உயரும் சந்தர்ப்பம் எழுகிறது" என்பது செய்தி.
- இந்த ஆன்மீக வாய்ப்பை அறிவது குறைவது, ஏற்பது இல்லை.

'பூரணயோக வாயில் திறப்பது' என்ற தலைப்பில் இது போன்ற 140 அறிகுறிகளை நான் சேகரம் செய்தேன். அவற்றுள் இது ஒன்று.

*தொடரும்.....*

❀ ❀ ❀





# அன்னையின் கைக்குட்டை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

''அந்த மனுஷ ரூபம் புருஷன்தான்னு ஏன் தாத்தா நெனச்சுக்கற?'' எத்தனை உறுதியாய்ச் சொல்கிறாள் வாணி.

"பொம்பளக்கி இந்த வுலகில பாதுகாப்பு இல்லையேம்மா'' என்று வருந்திக் கூறினார் தாத்தா.

"நீ சொல்லுறது சரிதான் தாத்தா. ஆனா, அந்த நெலய உண்டாக்கினதே நம்ப மனுஷ சமுதாயந்தானே. அவுங்க அவுங்க சுயநலத்தால உருவானதுதான் இந்தக் கொடும. அங்க அங்க கொலையும், கொள்ளையும் நடக்கறப்ப நிம்மதியா வாழுற மனுஷங்களுந்தான் இருக்குறாங்க. நம்ப மனசுல சுத்தம் இருந்தா சுகமா இருக்கலாம் தாத்தா. நான் சொல்ற அந்த அன்னை இதுவும் சொல்லியிருக்காங்க. கடவுள மனசார நம்பி ஏத்துக்கிட்டா ஆம்பள தொணை தர பாதுகாப்பைவிட அதிகப் பாதுகாப்பை அது தருமாம். அதனால நா புருஷத் துணையைத் தேடப்போறதில்ல. அந்த அன்னையோடத் துணையைத்தான் நம்பப்போறேன்'' என்றாள் திடமாக.

"ஊரு விட்டு ஊரு வந்து பொழைக்கிறோம். பாத்து நடந்துக்கத் தாயி'' என்று ஓய்ந்துபோனார் தாத்தா.

'உன் குடும்பத்தை நீயே தேர்ந்தெடுக்கலாம்என்றும் அன்னை சொல்லியிருப்பதாகவும் ஒரு செய்தியை அண்ணி சொல்லியிருந்-தாரே. அவ்வூரில் ஓரன்னையன்பர் இருப்பதாயும், அவர் அன்னை மயமானவர்என்றும் சொல்லியிருந்தாரே. அவரை ஒரு நாள் கண்டு வரவேண்டும்' என்ற எண்ணமும் இருந்தது. இவ்வாறு அண்ணியார் கொடுத்த அன்னையின் திருவுருவப் படத்தை கையில் வைத்தவண்ணம் தன்னை மறந்து கண்ணுறங்கிவிட்டாள்.

அவள் தன் தோழியுடன் தேவனாம்பட்டினம் திருவிழாவிற்குச்

செல்கிறாள். திடீரென அங்கே கார் ஒன்று வந்து நிற்கிறது. டிரைவர் இறங்கி உள்ளேயிருப்பவரிடம் ஏதோ (பணிவாய்க் குனிந்து) சொல்கிறார். மக்கள் கும்பலாய்க் காரைச் சூழ்ந்து நின்று வணக்கம் தெரிவிக்கின்றனர். யாரவர் என்று வாணி எட்டிப் பார்க்கிறாள். அவர்தாம் அவள் இப்போதெல்லாம் சதா நினைத்துக் கொண்டிருக்கிறாளே அந்த சக்தி வாய்ந்த தெய்வம்தான். கும்பலைக் கடந்து தன்னை மறந்து ஓடிச் சென்று கார் கதவருகே சென்றுவிட்டாள். உள்ளிருந்தபடியே இவளைப் பார்த்து புன்னகைத்தார். கார் புறப்படத் தயாரானது. மக்கள் விலகி வழிவிட்டனர். மனமின்றி வாணி நிற்கிறாள். கார் கிளம்பிவிட்டது. காருக்குள்ளிருந்து அழகிய வெள்ளை நிறக் 'கைக்குட்டை' ஒன்று பறந்து வந்து அவள் முகத்தில் ஒட்டிக் கொள்கிறது. சட்டென்று அதைப் பற்றிக் கொண்டாள். உடனே ஊருக்குத் திரும்ப வேண்டும். இப்போது கிடைத்த இந்த அரிய பொக்கிஷத்தை அனுபவிக்க வேண்டும். அதற்கு அவளுக்குத் தனிமை வேண்டும். திரும்புகிறாள். அவளுடன் வந்த தோழி பொன்னி, ''வாணி, எங்கபோற?'' என்றழைக்கிறாள்.

''நா வீட்டுக்குப் போறேன்'' என்கிறாள் வாணி.

''வீட்டிற்கா? திருவிழாப் பாக்க வந்தோமில்ல?'' என்றாள் பொன்னி.

''திருவிழாவா?'' என்கிறாள் வாணி.

''சரிதான், நாம இங்க எதுக்கு வந்தோம்னு மறந்திடிச்சா?'' என்றாள் பொன்னி.

''மறக்கலயே. வந்த வேலை முடிஞ்சுதான் கௌம்பறேன்'' என்கிறாள் வாணி.

''என்ன உளர்றே? இன்னும் சாமியே வரல, கும்பிடாம போனா எப்படி?'' என்கிறாள் பொன்னி.

''சாமி எப்பவோ வந்து போயிடிச்சு. நீதான் கவனமில்லாம நிக்குற'' என்கிறாள் வாணி.

''சரிதான், ஒனக்குப் புத்தி மாறிடிச்சுன்னு நெனைக்குறேன்'' என்கிறாள் பொன்னி.

''சாமி வந்தப்ப கவனிக்காம, போனபிறகு காத்திருக்கீங்களே, ஒங்களுக்குத்தான் புத்தி மாறிடிச்சு. நா வறேன்'' என்று புறப்பட்டு விட்டாள். வீட்டிற்குச் சென்ற வாணி, அறைக்குள் சென்று கதவைச் சார்த்தினாள். ஆர்வம் பொங்க அந்தக் கைக்குட்டையை எடுத்துப் பிரிக்கிறாள். ஓரங்கள் தைக்கப்பட்டு, சிறிய பூக்கள் பின்னப்பட்ட வேலைப்பாடு மிக்க கைக்குட்டை. நல்ல மணம் வேறு. ஆவலுடன் அதை முகம் முழுவதும் தழுவிக் கொண்டாள். அன்பு பொங்க முத்தமிட்டாள். யாரும் பார்க்குமுன் அதை டிரங்குப் பெட்டிக்குள் வைத்து மூடிவிட்டு வெளியே வந்தாள். இவளைக் கண்ட இவள் அம்மா, ''என்ன வாணி, திருவிழா காணப் போன சனம் திரும்பறதுக்குள்ள நீ எப்படி திரும்பி வந்த?'' என்றாள்.

''அங்க ஒரே கூட்டம். பிடிக்கல. அதான் திரும்பி வந்திட்டேன்'' என்றாள்.

''கூட்டந்தான் ஒனக்கு ஒவ்வாதில்ல? ஏன் அங்கெல்லாம் போவுற?'' என்றாள் அம்மா.

''போனதாலதான் அவுங்களப் பாத்தேன்'' என்று மனங் கொள்ளா மகிழ்வுடன் கூறும் மகளை வியப்புடன் பார்த்து,

''அவுங்களா? யார் அவுங்க?'' என்றாள் அம்மா.

''இந்தவூர் பெரிய மனுஷியாமே ஒருத்தங்க, அவுங்க அங்ஙன கார்ல வந்திருந்தாங்க'' என்றாள்.

''இந்தவூர்ப் பெரிய மனுஷியைப் பாக்க தேவனாம்பட்னம் போனியா? யாரந்த பெரிய மனுஷி?'' என்றாள் அம்மா.

''அவங்க பேரெல்லாம் தெரியாது. பெரிய மகாராணிகணக்கா கார்ல வந்தாங்க'' என்றாள் பெருமையாய்.

''சாமிய பாக்கப் போயி, மனுஷியைப் பாத்து மயங்கி வந்தியா?'' என்றாள் அம்மா.

''இல்லம்மா. அவங்க வெறும் மனுஷி இல்லயாம். சாமியே மனுஷியா வந்தவங்களாம், பேசிக்கிறாங்க''.

பட்டென்று முதுகில் ஓரடி விழுந்தது. ''பட்டப்பகலில் என்ன தூக்கம்? பகல் கனவு வேற. ஏதோ சாமி, மனுஷின்னு பேசினியே, என்ன கனாக் கண்ட?'' என்றாள் அம்மா.

'அட! எல்லாம் கனவா? நா தேவனாம்பட்டனம் போகலையா? அவங்களைப் பாக்கலையா? கைக்குட்டை எங்கே? நல்ல வாசமா

இருந்திச்சே' என்று மனதிற்குள் பேசுகிறாள் வாணி.

''என்னடி விழிக்கிறே?'' என்றாள் அம்மா.

''தேவனாம்பட்டனம் திருவிழாவுக்குப் போனதுபோல கனவு'' என்றாள் வாணி.

''எந்திரிச்சு வேலய கவனி'' என்று கூறிச் சென்றாள் அம்மா.

இன்று எப்படியாவது அன்னையைப் பார்த்திருக்கும் அந்த அன்பரைக் கண்டுவர வேண்டும்என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

ஒரு மாலை நேரத்தில் வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு கிளம்பினாள். அண்ணியார் தாம் சென்று வந்த வீடு பற்றித் தன் எஜமானியம்மாவுக்குக் கூறிய அடையாளங்களை அவள் நன்றாக கவனித்து வைத்திருந்தாள். எனவே, அந்த வீட்டைக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏதும் இருக்கவில்லை. ஓரன்னையன்பரை, அன்னையை நேரில் தரிசித்தவரை, அன்னையை வாழ்வில் ஏற்று அன்னைமயமாக வாழும் ஒருவரைப் பார்க்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சி நெஞ்சு நிறைந்திருந்தது. தான் கண்ட கனவை அந்த அன்பருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமிருந்தது. அதற்கிடையில் தன்னால் அவரைக் காணக்கூடுமா? அவர் தன்னை ஒரு பொருட்டாக மதித்துப் பேசுவாரா? என்ற எண்ணம் எழுந்தது. உடனே அவரையும் தன்னையும் விலக்கி, அவருள்ளும் தன்னுள்ளும் இருக்கும் அன்னையைக் கருதினாள். அவர் யாரை நேசிக்கிறாரோ, அந்த அன்னையையே தானும் மனமார நேசிப்பதை எண்ணினாள். எல்லாம் மறந்துவிட்டது.

வெளிப்புற காம்பவுண்ட் கதவு திறந்திருந்தது. யாரோ அப்போதுதான் உள்ளே சென்றிருக்க வேண்டும். முன்பின் அறியாதவர் வீட்டில் உள்ளே நுழைவது தவறுஎன்று அறிந்திருந்தாள். ''அம்மா, அம்மா'' என்று சில முறை அழைத்தும் யாரும் வாராததால் வீட்டு முன்புறம் போய் திறந்த கதவிற்கு வெளியே நின்றாள். ''அன்னையே! நான் இங்கு உம்மை தரிசிக்கவே காத்திருக்கிறேன். நீங்கள்தான் எனக்கு உதவ வேண்டும்'' என்று மனதில் வேண்டி நின்றாள். அப்போது மூன்று வயது குழந்தையொன்று சலங்கை ஒலிக்க உள்ளிருந்து வெளியே ஓடி வந்தது. அதன் கையில் ஒரு கைக்குட்டை. இவளைக் கண்டதும் சிரித்துக் கொண்டே, ''இந்தா,



இது உனக்கு வேணுமா? எடுத்துக்கோ'' என்று அவள் கையில் கொடுத்துவிட்டு, வெளியே ஓடிவிட்டது. என்ன அதிசயம் இது! கணப்போது இன்ப அதிர்ச்சியில் யாவும் மறந்து நின்றாள். இது அவள் கனவில் கண்ட பூவேலைப்பாடமைந்த பெண்கள் பயன்படுத்தும் அழகிய கைக்குட்டை. அதைத் தொட்ட கையெல்லாம் மணத்தது. எப்படி இது!

குழந்தை சென்ற சிறிது நேரத்தில் ஒரு பெரியவர் வெளியே வந்தார். வயது முதிர்ச்சியிலும் தெளிவாகவும், கனிவாகவுமிருந்தார். அவர் பார்வையில், முகச் சாயலில் அவள் கண்ட அன்னை திருவுருவப் படத்தின் சாயல் இருந்தது. 'என்ன சொல்வது? எப்படிப் பேசுவது?' என்று புரியாமல் தயங்கி நின்றாள். அவர் கையில் ஒரு சாக்லேட் இருந்தது. ''இப்படி ஒரு குழந்தை ஓடி வந்ததா?'' என்று கேட்டார்.

''ஆமாம், வெளியே சென்றுவிட்டது'' என்றாள்.

''குறும்புக்காரக் குழந்தை'' என்றவர்,

''நீ யாரம்மா? என்ன வேண்டும் உனக்கு?'' என்றார் எளிமையாக.

''அன்னை என்பவரைப் பற்றி சில தினங்களுக்கு முன்புதான் கேள்விப்பட்டேன். அவரை நேரில் தரிசித்த, அவரை மிகவும் பக்தி செய்யும் ஒருவர் இந்த வீட்டில் இருப்பதாயும் சொன்னார்கள். அவரைத் தேடித்தான் வந்தேன்'' என்று மெல்ல சொல்லிவிட்டாள்.

''அப்படி என்றால் நீ என் உறவுக்காரப் பெண்தான்'' என்றார் பெரியவர்.

''நீங்கள் என் சொந்தக்காரரா'' என்றாள் ஆச்சர்யமாக.

''ஆமாம். அன்னைக்குச் சொந்தமென்றால் எனக்குச் சொந்தமில்லையா?'' என்றார் நெடுநாள் அறிந்தவர்போல.

ஏதோ ஏழு கதவுகளைத் தாண்டி யார் கண்ணுக்கும் புலப்படாமல் மறைவாய் இருப்பார். அவரைக் காணத் தன்னை விடமாட்டார்கள் என்று எண்ணியதெல்லாம் போக, இப்படி வெளியே வந்து அவரே காட்சி தந்தது நம்ப முடியவில்லை.

''ஐயா, எனக்கு அன்னையை ரொம்பவும் புடிச்சிருக்கு. ஆனா எழுத்து படிப்பில்ல. அதனால படிச்சுத் தெரிஞ்சுக்க முடியாதத ஒம்மைப் பாத்து அறிஞ்சிக்க ஆவலா வந்தேன்'' என்றாள்.

‘‘அன்னைப் பிடித்தால் போதும். அதற்கு எழுத்தெதற்கு? படிப்பெதற்கு? சிலருக்கு இவையெல்லாம் தடையாகவே இருந்திருக்கிறது. உள்ளே வாம்மா’’ என்றார்.

தூய்மையும், அமைதியும் தவழ்ந்தது.

‘‘எனக்கு ஒரு விருப்பம் ஐயா. அதைச் சொன்னால், நிறைவேத்துவீரா?’’ என்றாள்.

‘‘சொல்லம்மா’’ என்றார்.

‘‘அன்னையம்மா உங்களுக்கு நிறைய பரிசெல்லாம் கொடுத்திருக்காங்கன்னு சொன்னாங்க. அதெ நானும் பாக்கலாமுங்களா?’’ என்றாள் தணியாத ஆர்வத்துடன்.

‘‘நான் அவற்றைக் காட்சிப் பொருள் ஆக்க முடியாதம்மா. இவை அன்னையின் அருமை உணர்ந்தவர்களுக்குப் போய்ச் சேர வேண்டியவை. அவற்றைக் கவனமாகப் பாதுகாக்கவே அன்னை என்னை வைத்திருக்கிறார்’’ என்றார் உருக்கமாக.

‘‘ஐயா, நான் அந்தப் பரிசுங்கள வேடிக்கை பாக்க ஆசைப்படலை ஐயா. அன்னையா நெனச்சு தரிசனம் செய்யவே வந்தேனுங்க’’ என்று கண்களில் கண்ணீர் தளும்பக் கூறினாள்.

‘‘அப்படியா? சரி சரி, வா’’ என்றவர், கண்ணாடியால் செய்யப்பட்ட மேல்புறம் மூடிய அந்தப் பெட்டியை நோக்கி அழைத்துச் சென்றார். பக்கவாட்டில் திறந்திருந்த அதன் கதவை மூடினார். ‘‘இப்போதுதான் இந்தப் பெட்டியைத் திறந்து சுத்தம் செய்து கொண்டிருந்தேன். அந்தப் பக்கத்து வீட்டுக் குழந்தை வந்தது. அதற்குச் சாக்லேட் எடுக்க உள்ளே போனேன். அதற்குள் அது ஓடிவிட்டது’’ என்றவர், ‘‘கிட்ட வந்து தரிசனம் செய்து கொள்ளம்மா’’ என்று கூறவே, பெட்டியருகே வந்து மேல்புறக் கண்ணாடி வழியே அன்னையின் அருட்கொடைகளை தரிசித்தாள்.

மோதிரம், பேனா, பென்ஸில், ரிஸ்ட் வாட்ச், சாக்லேட் தாள், உலர்ந்த பல ரகப் பூக்கள், புத்தகம், செண்ட் பாட்டில், மெஸேஜ் கார்டு என்று ஒவ்வொன்றையும் பார்க்கப் பார்க்க, இவை அன்னையின் ஸ்பரிசம் பட்டவை என்று நினைக்க நினைக்க பரவசமாயிற்று. திடீரென ஓரிடம் வெற்றிடமாய் இருந்தது.

‘‘தரிசித்தாயா?’’ என்று பரிவுடன் கேட்டவண்ணம் பெட்டியருகே வந்து உள்நோக்கிப் பார்த்தவர், ‘அட, இதிலிருந்த கைக்குட்டையைக் காணோமே. இதை நான் திறந்தபோது அக்குழந்தை என் பக்கத்தில் இருந்தது. ஒவ்வொன்றையும் பெயர் கேட்டது, சொன்னேன். நான் உள்ளே போனபோது அக்குழந்தை இந்த கைக்குட்டையை எடுத்துவிட்டதோ’, கலங்கிப்போனார். ‘‘இதை நான் உன்னிடத்தில் கொடுத்து வைத்திருக்கிறேன். இதற்குரியவர் உன்னைத் தேடி வரும்போது கொடுத்துவிட வேண்டும்’’ என்று கைக்குட்டைக்கு கட்டளை விதித்திருந்தார் அன்னை. சிவபெருமான் கொடுத்த திருவோடு போல் அன்னை மாயம் செய்துவிட்டாரா?

‘‘ஏனம்மா அந்தக் குழந்தை போகும்போது பார்த்தாயா? அதன் கையில் ஏதேனும் கைக்குட்டை இருந்ததா? குழந்தைகளை கடிந்து கொள்வது அன்னைக்குப் பிடிக்காது. அதிலும் மூன்று வயதுடைய குழந்தை. அது தவறு செய்ய முடியாது’’ என்று தவித்தார்.

‘‘ஐயா, என்னை மன்னிச்சிடுங்க’’ என்று வாணி அவர் காலில் விழுந்தாள்.

‘‘எழுந்திரு, எழுந்திரு. ஏன் என் காலில் விழுகிறாய்?’’ என்றார்.

‘‘நான் உங்களைப் பார்த்தவுடன் இதைச் சொல்லியிருக்க வேண்டும். அந்தக் குழந்தை இதை, ‘‘உனக்கு வேணுமா? எடுத்துக்க’’ என்று மழலையாய்ச் சொல்லி, என்னிடம் கொடுத்து ஓடிவிட்டது. நான் ஒரு கனாக் கண்டேன் ஐயா. தேவனாம்பட்டனம் திருவிழாவில் அன்னையம்மா கார்ல வந்தாங்க. நான் ஓடிப் போய் நின்னப்ப இதே போல கைக்குட்டை ஒண்ணு பறந்து வந்து என் மூஞ்சியிலே ஒட்டிக்கிச்சு. ஒரே வாசமா இருந்திச்சு. அது இது போலவே இருந்திச்சு. அதனால என்னை மறந்து இதை நானே வச்சுக்கிட்டேன். திருடுற எண்ணம் எதுவுமில்ல ஐயா’’ என்று அழுது கொண்டே கூறினாள்.

‘‘அம்மா! நீ சாதாரணப் பொண்ணில்லம்மா. இந்த கைக்குட்டையை முதன்முதல்ல தேவனாம்பட்டினத்தில அன்னையை கார்ல பார்த்தபோதுதான் கிடைக்கப்பெற்றேன். அவங்க கையிலேர்ந்து நழுவி விழுந்தது. அதை எடுத்துப் பத்திரமாய் வைத்திருந்து, அவர்களிடம் சொன்னபோது, ‘‘இது உனக்கில்லை. இதைத் தேடி ஒருத்தி வருவாள். வைத்திருந்து கொடுக்க வேண்டும்’’ என்றார்.

எப்படி அன்னையே அந்த பக்தரை நான் கண்டுபிடிப்பது? என்று தயங்கியபடி கேட்டேன்.

“நீ ஒன்றும் செய்ய வேண்டாம். பாதுகாப்பது மட்டும் உன் வேலை. தருணம் வரும்போது நானே சேர்த்துவிடுவேன் என்றார்”.

மீண்டும் குழந்தை உள்ளே வந்தது. அவள் கையிலிருந்த கைக்குட்டையைக் காட்டி, “இது ஒனக்குத்தான். நீயே வெச்சுக்கோ” என்று சிரித்தது.

(நான் என்னை மறந்துவிட்டேன். இனி கதை தொடர்வது எப்படி?)

*முற்றும்.*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னை தவறாது வலியுறுத்தும் கடந்த காலக் கர்மத்தை 9 நிலைகளாகப் பிரிக்கலாம். கர்மத்தை எண்ணமாக மாற்றி மனம் இடைவிடாது திரும்ப திரும்ப நினைக்கும். உணர்ச்சி அதே கர்மத்தைத் துள்ளி எழும் வேகமாக்கு-கிறது. ஒவ்வொரு முறையும் அது தவறாது தலைதூக்கும். உடலில் இதே கர்மம் மௌனமாக மீண்டும் மீண்டும் செயல்படும் பழக்கமாக இருக்கிறது. இந்தப் பழக்கத்திற்கு உணர்வோ, எண்ணமோ இல்லை.

***இடைவிடாத எண்ணம், துள்ளி எழும் வேகம், தன்னை வலியுறுத்தும் பழக்கம் ஆகியவை கடந்த காலக் கர்மமாகும்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# உள்ளன்புடனுள்ள நல்லெண்ணம்

அழகில்லை, பணமில்லை, வயது தாண்டிவிட்டது, இனித் திருமணமில்லை என்ற நிலையில் உள்ளவர் விரக்தி மயமாக இருப்பார்.

✩ ஷார்லோட் விரக்திபடவில்லை.

✩ மாறாக அவர் மனதில் நல்லெண்ணம் உற்பத்தியாயிற்று.

✩ "ஜேன் பிங்லியை மணக்க என்ன செய்ய வேண்டும், டார்சி எலிசபெத் மீது நாட்டமாக இருப்பதை எலிசபெத் அறியவில்லை. எப்படி இவ்விருவரையும் திருமணம் செய்து வைக்கலாம்" என்ற ஷார்லோட்டிற்கு £2000 வருமானம் உள்ள காலின்ஸுடன் திருமணம் நடந்தது. இதை ஏற்கனவே விவரமாக எழுதியுள்ளேன். இதன் கருத்தென்ன?

✩ நம் நிலைமையைப் புறக்கணித்து, இருக்கும் சந்தர்ப்பத்தில் யாருக்கு என்ன நல்லது செய்யலாம் என ஒருவர் நினைத்தால் அந்த சந்தர்ப்பத்திற்குள் அதிகபட்சம் அவர் மனம் நாடுவதை - அவர் தேடுவது மணம் - அவர் மனத்திற்கு (இராசி) ஏற்ப பூரண திருப்தி ஏற்படும்படி வாழ்க்கை அளிக்கும் என்பது உட்கருத்து.

❑ அதுவே அன்பருக்கு எல்லாக் கட்டத்திலும் ஒரு படி அதிகமாக அமையும்.

3) உள்ள சந்தர்ப்பத்தில் அதிகபட்சம் *மாறி* இந்த சந்தர்ப்பத்தில் இல்லாதது வரும்.

4) மனம் தேடும் அந்தஸ்து கிடைத்தது - மனம் கற்பனை செய்ய முடியாத அந்தஸ்து வரும்.

❀❀❀

# ஜின்னாவின் பாக்கிஸ்தான்

* உயிர் போவதற்கு சில மணி நேரம் முன்னால் பாக்கிஸ்தான் தான் சாதித்த பெருந்தவறு எனவும் மீண்டும் இந்தியாவை ஒன்றுபடுத்த விரும்புவதாகவும் ஜின்னா அவர் சகோதரியிடம் கூறினார்.
* 1945இல் உலகம் ஒன்றுபட்டு உலக சர்க்கார் எழும் வாய்ப்பு இருந்தது.
* 1920க்கு முன் இந்தியா சுதந்திரம் பெறும் பெருவாய்ப்பு நிறைந்து இருந்தது.
* ***அன்பர்கள் வாழ்வில் அன்னையை அறிந்து 10 அல்லது 40 வருஷங்களுக்குப் பின் பூர்த்தியானவை ஆரம்பத்திலேயே பூர்த்தியாகும் வாய்ப்பு எழுகிறது.***

  என்று அன்பர் இந்த உண்மையை பூரணமாக அறிகிறாரோ, அன்றே அது பூரணமாகப் பலிக்கும்.
* 30 வருஷமாக வியட்நாம் சிதைந்தது. இந்தியா போல் வியட்நாமும் போர் முடிந்தவுடன் சுதந்திரம் பெற்றிருக்கலாம்.
* 1939இல் இரண்டாம் உலகப் போரை தவிர்க்கும் வாய்ப்பு ஏராளமாக இருந்தது.
* 1929இல் சர்வதேசப் பொருளாதார நெருக்கடியை தவிர்க்கும் வாய்ப்பு இருந்தது.
* ***100 அல்லது 500 ஆண்டிற்குப் பின்னால் எழும் வாய்ப்பை உலகம் இன்றே பெறலாம்.***
* அதைப்பெற மனிதன்,

  *இன்று சத்தியஜீவிய விழிப்பைப் பெற்று*

  *பெற்றதை மனதில் கொண்டு வாராமல்*

  *வெளியில் சொல்லாமல், சொல்ல நினைக்காமல்*

  *ஜீவனில் உடலின் ஆழத்தில் பூரணம் பெறும்*

**பொறுமைபெற வேண்டும்.**

***சத்தியஜீவியம் சைத்தியமாக மேல்வந்து***
***ஜீவனில் ஆன்மீகப் பொறுமையாவது***
***வாழ்வில் யோகம் பலித்து உலகம் செழிப்பதாகும்.***

❀❀❀

July 2010 Jiviyam 16 Malar 03
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11


## புதிய வெளியீடுகள்

### கர்மயோகியின்

| | |
|---|---|
| **அன்னையின் ஆன்மீகப்பரிசு** | ரூ.100/- |
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** | ரூ.100/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்** | ரூ.100/- |

*தமிழாக்கம்:* என். அசோகன்

| | |
|---|---|
| **SATYA JYOTHI** | ரூ.200/- |

**(CONCISE TRUISMS)**
**N.Asokan**

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191